வோச்சி (மதுரைக். 54). 3. Unique beauty; வேறொன்றிற்கில்லா அழகு. வீறுயா கலச நன்னீர் (சீவக. 489). 4. Splendour; பொலிவு. சாறயா களத்து வீறுபெறத் தோன்றி (திருமுரு. 283). 5. Greatness; பெருமை. (இலக். அக.) 6. Abundance, plenty; மிகுதி. வானிகா வீற்றிலாபம் விளை வுழிச் சேறல்போல (சேதுபு. திருநாட். 42). 7. Good fortune; merit; நல்வினை. விசையை யெனா றல கோடிய வீறிலேன (சீவக. 1814). 8. Strength, as of medicines or poisons; power; மருந்து முதலியவற்றின் வீரியம். அந்த மருந்துக்கு வீறில்லை. 9. Arrogance; கருவம். கஙகை வீறடக்கும் . . . சடையாய் (காஞ்சிப்பு. வாணிச். 84). 10. Dislike, disgust; வெறுப்பு. (யாழ். அக.) 11. Light, brightness; ஒளி. (W.) 12. Separateness; வேறு. வீறுவீ றியங்கும் (புறநா. 173). 13. Solitariness; தனிமை. (W.) 14. Blow, strike; அடி. நாலு வீறு வீறினான்.

வீறுவாதம் vīṟuvātam, *n.* <வீறு+வாதம்[2]. A form polemical discussion. See விசியுழி. வீறுவாதம புகலும்வாய் வாதகோயாளர்க்கும் (தாயு. மலைவளா. 3).

வீறெனல் vīṟeṉal, *n.* See வீரெனல்.

வு

வு vu. The compound of வ் and உ.

வூ

வூ vū. The compound of வ் and ஊ.

வெ

வெ ve. The compound of வ் and எ.

வெஃகல் veḵkal, *n.* <வெஃகு-. 1. Excessive desire; மிகுவிருப்பம். (பிங.) 2. Avarice, greed; பேராசை. (சது.)

வெஃகா veḵkā, *n.* <*vēgā*. 1. Vēkavati, a river near Conjeevaram; காஞ்சிபுரத்தருகில் ஓடும் வேகவதி நதி. சேயாறுமு வெஃகாவினுளும் . . . நீரிழிந்தவழி (S. I. I. ii, 352, 115). 2. A Viṣṇu shrine; திருமால் திருப்பதிகளு ளொன்று. (திவ். இயற். 3, 62.)

வெஃகாமை veḵkāmai, *n.* <வெஃகு-+ஆ neg. 1. Absence of desire; அவாவின்மை. 2. Absence of cupidity or covetousness; பிறர் பொருளை வெளவக் கருதாமை. (குறள், அதி. 18, தலைப்பு.) 3. Dislike, disgust; வெறுப்பு. (W.)

வெஃகு-தல் veḵku-, 5 *v. tr.* 1. To desire ardently; மிகவிரும்புதல். அருள் வெஃகி (குறள், 176). 2. To covet; பிறர்பொருளை இச்சித்தல். இலமென்று வெஃகுதல் செய்யார் (குறள், 174).

வெக்கடுப்பு vekkaṭuppu, *n.* <வெம்-மை+. 1. Sternness of countenance, stiffness; கடுகடுப்பு. *Loc.* 2. Sore-eyes without inflammation; கண்ணோய்வகை. (W.)

வெக்கம் vekkam, *n.* Corr. of வெட்கம்.

வெக்களி-த்தல் vekkaḷi-, 11 *v. intr.* See வெக்காளி-. (W.)

வெக்காயம் vekkāyam, *n.* prob. வெம்-மை +காய்-. Heat; தாபம். சம்சார வெக்காயந் தட்டாத படி போய் (ஈடு, 5, 9, 5).

வெக்காலி vekkāli, *n.* See வெட்காலி. (W.)

வெக்காளம் vekkāḷam, *n.* perh. வெம்-மை +காலம். 1. Fair weather without rain; மழையின்றி இனிதாயிருக்குங் காலம். (W.) 2. Sultriness; புழுக்கம். 3. Grief; துயரம். (யாழ். அக.)

வெக்காளி-த்தல் vekkāḷi-, 11 *v. intr.* <வெக்காளம். 1. To clear up, as the weather; to be bright with sunshine; வானந் தெளிவாதல். (W.) 2. To be grieved at heart; மனத்துயர்படுதல். (யாழ். அக.)

வெக்காளிப்பு vekkāḷippu, *n.* <வெக்காளி-. See வெக்காளம், 1. (W.)

வெக்கை vekkai, *n.* prob. வெம்-மை. [K. *benke*, M. *vekka*.] 1. Heat; உஷ்ணம். பூவில் வெக்கை தட்டும் (ஈடு, 5, 9, 2). 2. Sultriness; புழுக்கம். 3. Radiated heat, as from a hot place; உஷ்ணப் பிரதேசத்தினின்றும் வீசும் அனல். 4. See வெக்கைச்சூடு. 5. Pox, small-pox; வைசூரி நோய். (W.) 6. Rinderpest, cattle plague; மாட்டுநோய்வகை. (W.) 7. Threshing-floor; கடாவிடுங்களம். வெக்கைப் பகுஉப்பக டுதிர்த்த . . . செல்லினை (பதிற்றுப். 71, 3).

வெக்கைச்சூடு vekkai-c-cūṭu, *n.* <வெக்கை+. *Loc.* 1. A disease of children. See கணைச்சூடு. 2. See வெட்டை[1], 4, 5.

வெக்கைதட்டு-தல் vekkai-taṭṭu-, *v. intr.* <id.+. 1. To be affected with heat; to radiate heat; உஷ்ணம் உண்டாதல். பூவில் இழியில் அதில் வெக்கைதட்டு மென்று (ஈடு, 1, 4, 7). 2. To suffer from leucorrhea; வெட்டைநோயால் வருந்துதல்.

வெக்கைநோய் vekkai-nōy, *n.* <id.+. 1. See வெக்கை, 5, 6. (W.) 2. See வெட்டை[1], 4, 5. *Loc.*

வெகிச்சீமை vekiccīmai, *n.* <*bahis*+*sīmā*. Outer limit; வெளியெல்லை. புறப்பாட்

டெல்லை யென்னும் வெகிச்சிமைக்கண் வருவது அபா தானம (பி. வி. 11, உரை).

வெகிர்முகம் vekir-mukam, n. <bahu-mukha. Outer or external side; வெளிமுகம். மகரிகை நிறைய வெகிர்முக மாக்கி (பெருங். மகத. 17, 161).

வெகு[1] veku, adj. <bahu. 1. Many; அநேகமான. 2. Much; அதிகமான. வெகுகனக வொளி குலவும் (திருப்பு. 20).

வெகு[2]-த்தல் veku-, prob. 11 v. tr. & intr. <வெகு. To be excessive, abundant; மிகுத்தல். (யாழ். அக.)

வெகுச்சுரு vekuccuru, n. See வேதசுருதம், 1, 2. (பொருட். நி.)

வெகுச்சுருதம் veku-c-curutam, n. See வேதசுருதம், 1, 2. (W.)

வெகுசங்கை vekucaṅkai, n. Corr. of பகிசங்கை. Loc.

வெகுசனம் veku-caṉam, n. <வெகு+. Multitude, crowd of people; சனக்கூட்டம். Colloq.

வெகுசனவாக்கு vekucaṉa-vākku, n. <வெகுசனம்+. Popular voice or opinion; பொதுமக்களின் அபிப்பிராயம். Colloq.

வெகுசாய் vekucāy, adv. <bahuśaḥ. 1. Almost, for the most part; most probably; பெரும்பாலும். வெகுசாய் இன்று மழைபெய்யும். 2. See வேதவாய், 1.

வெகுசு vekucu, n. <id. Plenty; மிகுதி. (யாழ். அக.)

வெகுசுருதம் veku-curutam, n. <bahu-śruta. 1. Wide information; மிகுந்த கேள்வி. 2. Extensive knowledge or learning; பரந்த கல்வி. 3. A treatise on architecture, one of 32 ciṟpa-nūl, q.v.; சிற்பநூல் முப்பத்திரண்டனுள் ஒன்று. (இருசமய. உலகவழக். சிற்பசாத. 3.)

வெகுட்சி vekutci, n. <வெகுள்-. Wrath, rage; சினம். கடையிடை தெரியார் தம்முட் டாகிய விம்ம வெகுட்சியுள் (பெருங். இலாவாண. 2, 83 - 84).

வெகுண்டம் vekuṇṭam, n. perh. வெகு+கண்டம்[3]. Sugarcane; கரும்பு. (மூ. அ.)

வெகுநோக்கு vekuṉōkku, n. <வெகுள்-+நோக்கு. Angry look; கோபப் பார்வை. வெருக்கு விடையன்ன வெகுநோக்கு (புறநா. 324).

வெகுத்தம் vekuttam, n. 1. See வேதத்துவம், 1, 2. (யாழ். அக.) 2. See வேதத்துவம், 3. (W.)

வெகுத்துவம் vekuttuvam, n. <bahu-tva. 1. Abundance; மிகுதி. 2. Plurality; பன்மை. (W.) 3. Magnificence; மகத்துவம். (W.)

வெகுதானிய vekutāṉiya, n. <Bahudhānya. The 12th year of the Jupiter cycle. See பகுதானிய.

வெகுநாயகம் veku-nayakam, n. <bahu-nāyaka. Government, rule or leadership in the hands of many; பலருடைய ஆட்சி. மொழியும் வெகுநாயகரு சேரிடமும (அறப. சத. 57).

வெகுநியாயம் veku-niyāyam, n. <bahis+nyāya. External worship; வெளியரங்கபூசை. (W.)

வெகுபத்திரி veku-pattiri, n. prob. bahu+patrī. 1. Brinjal. See கத்திரி[1]. 2. Otaheite gooseberry. See அருநெல்லி, 2. (மலை.) 3. Indian nightshade. See முள்ளி[1], 2. (சங். அக.)

வெகுபிட்டம் veku-piṭṭam, n. prob. id.+. pṛṣṭha. Expanse; விரிவு. (யாழ். அக.)

வெகுபுத்திரி veku-puttiri, n. <bahu-putrī. 1. A small plant. See கீழாநெல்லி. (தைலவ.) 2. Sacred basil. See துளசி, 1. (சங். அக.)

வெகுமஞ்சரி veku-mañcari, n. <bahu-mañjarī. Sacred basil. See துளசி, 1. (இலக். அக.)

வெகுமதி[1] veku-mati, n. <bahu+mati. Present, reward; நன்கொடை.

வெகுமதி[2]-த்தல் vekumati-, 11 v. tr. <வெகுமதி. 1. To consider to be of great value; to estimate highly; to hold in great regard; மேலாக மதித்தல். 2. See வேதமானி-, 1.

வெகுமாரி veku-māri, n. <வெகு+மாரி[1]. (யாழ். அக.) 1. Heavy rain; பெருமழை. 2. Increase; மிகுதி.

வெகுமானக்காரன் vekumāṉa-k-kāraṉ, n. <வெகுமானம+காரன்[1]. Man of pretensions; பாசாங்குக்காரன். (W.)

வெகுமானம் vekumāṉam, n. <bahu-māna. 1. See வெகுமதி. 2. High esteem, great respect; பெருமதிப்பு. வெகுமானமாகிலு மவமானமாகிலும் மேன்மையோர் செய்யி லழகாம் (அறப. சத. 45). 3. Civility; உபசாரம். (W.) 4. Pretension; பாசாங்கு. (W.)

வெகுமானி-த்தல் vekumāṉi-, 11 v. <வெகுமானம். tr. 1. To treat with respect; கண்ணியம்பண்ணுதல். 2. To treat with civility; உபசரித்தல். (W.) 3. To make presents; இனாங் கொடுத்தல்.—intr. To pretend to greatness; பெருமைபாராட்டுதல். (W.)

வெகுமுகம் veku-mukam, n. <வெகு+. That which divides into several branches in many directions; பலவாறகக் கிளைப்பது. (யாழ். அக.)

வெகுமூத்திரம் veku-mūttiram, *n.* <*bahu-mūtra.* Diabetes. See பகுமூத்திரம். (M. L.)

வெகுமூலம் vekumūlam, *n.* <*bahu-mūla.* Horse-radish tree. See முருங்கை. (இலக். அக.)

வெகுர் vekur, *n.* <வேர்க்குரு. Rash due to prickly heat; வேர்க்குரு. (W.)

வெகுரசம் veku-racam, *n.* <*bahu-rasa.* Sugarcane; கரும்பு. (மலை.)

வெகுரூபன் veku-rūpaṉ, *n.* <*bahu-rūpa.* 1. Chameleon. See பச்சோந்தி. (சங். அக.) 2. Šiva; சிவபிரான். (யாழ். அக.) 3. Viṣṇu; திருமால். (யாழ். அக.) 4. Brahmā; பிரமன். (யாழ். அக.) 5. Kāma; மன்மதன். (யாழ். அக.)

வெகுலாங்கம் vekulāṅkam, *n.* Worm-killer. See ஆடுதின்னாப்பாளை. (மலை.)

வெகுலாதி vekulāti, *n.* See வெகுலாலி. (சங். அக.)

வெகுலாலி vekulāli, *n.* <*bahulā.* A species of cardamom; சிற்றேலம். (மலை.)

வெகுவசனம் veku-vacaṉam, *n.* <*bahu-vacana.* (Gram.) Plural number. See பகுவசனம். (பி. வி. 24, உரை, பக். 44.)

வெகுவாசமுடையயோகி veku-vācam-uṭaiya-yōki, *n.* prob. வெகு + வாசம்[1] + உடை-மை +. Sweet flag; வசம்பு. (சங். அக.)

வெகுவாய் veku-v-āy, *adv.* <id. + ஆ[6]-. (W.) 1. Very much, greatly; மிகுதியாக. 2. See வெகுசாய், 1.

வெகுவாய்ச்சொல்(லு)-தல் vekuvāy-c-col-, *v. tr.* <வெகுவாய் +. 1. To speak at great length; விஸ்தாரமாகச் சொல்லுதல். 2. To speak with great insistence; வற்புறுத்திக் கூறுதல். (W.)

வெகுவிதம் veku-vitam, *n.* <*bahu-vidha.* Multiplicity; multifariousness; நானாவகை. (சூடா.)

வெகுவிரீகி vekuvirīki, *n.* <*bahu-vrīhi.* (Gram.) An elliptical compound word. See அன்மொழித்தொகை. (பி. வி. 20, உரை.)

வெகுள்(ளு)-தல் vekuḷ-, 2 *v. tr. & intr.* 1. To be angry; to be enraged at; கோபித்தல். வேர்த்து வெகுளார் விழுமியோர் (நாலடி, 64). 2. To hate, dislike; பகைத்தல். கல்லான் வெகுளுஞ் சிறுபொருள் (குறள், 870).

வெகுள்வு vekuḷvu, *n.* <வெகுள்-. See வெகுளி, 1. (W.)

வெகுளாமை vekuḷāmai, *n.* <id. + ஆ neg. Non-irascibility, absence of anger; கோபியாமை. புணரின் வெகுளாமை நன்று (குறள், 308).

வெகுளி vekuḷi, *n.* <id. 1. Anger, wrath, one of *mu-k-kuṟṟam,* q.v.; முக்குற்றங்களுள் ஒன்றான கோபம். வெகுளி கணமேயுங் காத்த லரிது (குறள், 29). 2. Dislike; hate; வெறுப்பு. ஒரு பொருளிடத்தும் விழைவொடு வெகுளியுறாது (திருப்போ. சந். குறுங்கழி. 5, 3). 3. [T. *vekali.*] Simple-minded person; கபடமற்றவ-ன்-ள்.

வெகுளிப்பு vekuḷippu, *n.* <id. See வெகுளி, 1. (திவ். இயற். திருவிருத். 17, வ்யா. பக். 117.)

வெங்கண் veṅkaṇ, *n.* <வெம்-மை +. 1. Fiery eye; அழலெழ விழிக்குங் கண். வெங்கட் புள்ளூர்ந்து வந்து (திவ். திருவாய். 6, 8, 5). 2. Cruelty; கொடுமை. வெங்கண் வேந்தர் (பெருங். வத்தவ. 6, 32) 3. Jealousy; பொறாமை. (W.) 4. Enmity, spite, animosity; பகைமை. (W.) 5. Evil eye; கண்ணூறு. *Colloq.* 6. A herring, golden glossed with purple. See தத்துவா. தன் கண்ணைக் கொடுத்து வெங்கண்ணை வாங்கவேண்டும்.

வெங்கண்டல் veṅ-kaṇṭal, *n.* <வெண்-மை +. Papery-barked obtuse-leaved mangrove, m. tr., *Aviccurria officialis-typica;* மரவகை. (L.)

வெங்கண்ணன் veṅkaṇṇaṉ, *n.* <வெங்கண். See வெங்கண்புள்தோஷம். (பாலவா. 79.)

வெங்கண்புள்தோஷம் veṅkaṇ-puḷ-tōṣam, *n.* <id. +. A disease of children ascribed to the influence of evil eye of birds; பட்சிதோஷத்தால் வருங் குழந்தைநோய்வகை. (பாலவா. 78.)

வெங்கணன் veṅkaṇaṉ, *n.* <id. Cruel man; கொடியவன். அவ்வெங்கணனைச் சமணன் எளிது முந்தி வினவுற்றான் (பிரபோத. 18, 23).

வெங்கணா veṅkaṇā, *n.* prob. வெம்-மை + காண்-. See வெங்கண், 6.

வெங்கணாத்தி veṅkaṇātti, *n.* See வெங்கிணாத்தி. (சங். அக.)

வெங்கதிர் veṅ-katir, *n.* <வெம்-மை +. See வெங்கதிர்ச்செல்வன். தற்சேரா வெந்நிழலோ ரெல்லோர்க்கும் வெங்கதிராம் (பு. வெ. 9, 34).

வெங்கதிர்ச்செல்வன் veṅkatir-c-celvaṉ, *n.* <வெங்கதிர் +. Sun; சூரியன். விசும்பி னிருளகற்றும் வெங்கதிர்ச்செல்வன் போல (புறநா 56).

வெங்கதிர்மதலை veṅkatir-matalai, *n.* <id. + மதலை[1]. Karṇa; கன்னன். (பிங்.)

வெங்கதிரோன் venkatirōṉ, n. <id. See வெஞ்சதிர்ச்செல்வன். வெங்கதிரோன் குலத்துக் கோர் விளக்காய்த் தோன்றி (திவ். பெருமாள். 10, 1).

வெங்கம் venkam, n. prob. bhaṅga. Extreme poverty; மிக்க வறுமை. வெங்கம் பரந்த அம்மையார்க்கு அமுதுபடி திருவிளக்கெண்ணெய்.

வெங்கலபாத்திரம் veṅkala-pāttiram, n. <வெங்கலம் + பாத்திரம்². Bronze vessel for domestic use; வீட்டுக்குரிய வெண்கலத்தாற் செய்த பாத்திரம்.

வெங்கலம் veṅkalam, n. Corr. of வெண்கலம்¹. (C. G.)

வெங்கலாமை veṅkalāmai, n. prob. வெங்கலம் + ஆமை. A kind of tortoise; ஆமைவகை.

வெங்கள் veṅ-kaḷ, n. <வெம்-மை + கள்³. Highly intoxicating liquor; கடுக மயக்குங் கள். வெங்கட் டொலைச்சிய விருந்திற் பாணி (சிலப. 10, 131).

வெங்களம் veṅ-kaḷam, n. <id. + களம்². Battlefield; போர்க்களம். மறமன்னர் வெங்களத்து வேலுயர்த்த வேந்து (பு. வெ. 9, 11).

வெங்கன் veṅkaṉ, n. <வெங்கம். Poverty-stricken person, pauper, used in contempt; தரித்திரன். (W.)

வெங்காக்கணம் veṅ-kākkaṇam, n. <வெண்-மை +. White-flowered mussel-shell creeper. See வெள்ளைக்காக்கணம். (பரி. அக.)

வெங்காயத்தாமரை veṅkāya-t-tāmarai, n. prob. வெங்காயம் +. Hyacinth, a parasitic water-plant; நீர்ப்பூடுவகை. Mod.

வெங்காயப்பூக்கோரை veṅkāya-p-pū-k-kōrai, n. prob. id. + பூ³ +. A kind of sedge; கோரைவகை. (M. N.A.D. II, 170.)

வெங்காயம் veṅ-kāyam, n. See வெண்காயம். (பதார்த்த. 445.)

வெங்காயவெடி veṅkāya-veṭi, n. See வெண்காயவெடி. Loc.

வெங்கார்¹ veṅ-kār, n. <வெம்-மை + காரம்². Heat; வெப்பம். (யாழ். அக.)

வெங்கார்² veṅ-kār, n. <id. +. A kind of paddy; நெல்வகை.

வெங்கார்நாற்றம் veṅkār-nāṟṟam, n. <வெங்கார்¹ +. Odour caused by rain falling on hot, dry ground; தலைப்பெயல் மழையாற் காய்ந்த மண்ணினின்று எழும் ஆவிநாற்றம். காடுகள் தரும் வெங்கார்நாற்றமும் (பரிபா. 20, 10, உரை).

வெங்கார்மண் veṅkār-maṇ, n. <id. +. Soil hot with sun's heat; சூரியவெப்பத்தாற் சூடேறிய நிலம். (சீவக. 2503, உரை.)

வெங்காரம்¹ veṅ-kāram, n. prob. வெண்மை + காரம்¹. Borax, *Sodae soboras;* மருந்துச்சரக்குவகை. (பதார்த்த. 1103.) வெங்காரம் வெய் தெனினு நோய்தீர்க்கும் (நீதிநெறி. 59).

வெங்காரம்² veṅkāram, n. prob. வெம்-மை + id. A kind of caustic; புண்ணுக்கு இடும் ஒரு வகைக் காரம்.

வெங்காரிப்பு veṅkārippu, n. <வெங்கார்¹. Cracking of agricultural land by excessive heat; வயல்நிலம் அதிகவெப்பத்தால் வெடிக்கை. Loc.

வெங்காரிப்புவெட்டு-தல் veṅkārippu-veṭṭu-, v. intr. <வெங்காரிப்பு +. To open the ridge for watering a field for the first time after harvest; அறுவடைக்குப் பிறகு வயலுக்கு நீர்விட வரப்பு வெட்டுதல். Tj.

வெங்காருடைப்பு veṅkār-uṭaippu, n. <வெங்கார்¹ + உடைப்பு¹. Cracking of ridges in wet lands owing to *veṅkār;* சூரிய வெப்பத்தால் வயல்வரப்புப் பிளந்திருக்கை. Tj.

வெங்கான்வெளி veṅ-kāṉ-veḷi, n. <வெம்-மை + கான்³ + வெளி¹. Arid land, desert; நீரற்ற பிரதேசம். (யாழ். அக.)

வெங்கிஞாத்தி veṅkiñātti, n. A huge, mountain snake; பெரிய மலைப்பாம்புவகை. (W.)

வெங்கியம் veṅkiyam, n. cf. *vyaṅgya.* 1. Suggested sense. See வியங்கியம், 1. 2. Line of demarcation; எல்லைவரம்பு. Loc.

வெங்கிராயன்வெளி veṅkirāyaṉveḷi, n. See வெங்கான்வெளி. (யாழ். அக.)

வெங்குசம்பா veṅku-campā, n. prob. வெம்-மை + சம்பா¹. A kind of *campā* paddy; சம்பாநெல்வகை. (A.)

வெங்குரு veṅkuru, n. <id. + குரு⁵. 1. Shiyali; சீகாழி. சோலைகள் சூழ்ந்த வெங்குரு மேவி யுள்வீற்றிருந்ததாரே (தேவா. 85, 1). 2. Yama; யமன். கடுஞ்சூதர் . . . பற்றித்தம வெங்குருவின் பாற்காட்ட (போற்றிபஃறொடை).

வெங்கை veṅkai, n. Veṅkaṉūr in Trichinopoly District; திரிச்சிராப்பள்ளி ஜில்லாவைச் சார்ந்த வெங்கனூர். (G. Tp. D. I, 308.)

வெங்கைக்கலம்பகம் veṅkai-k-kalam-pakam, n. <வெங்கை +. A *kalampakam* poem on Śiva at Veṅkai, by Civappirakācar; வெங்கைச் சிவபிரான்மீது சிவப்பிரகாசர் பாடிய கலம்பக நூல்.

வெங்கைக்கோவை veṅkai-k-kōvai, n. <id.+. A *kōvai* poem on Śiva at Veṅkai, by Civappirakācar; வெங்கைச் சிவபிரான்மீது சிவப்பிரகாசர் இயற்றிய கோவைப்பிரபந்தம்.

வெங்கையலங்காரம் veṅkai-y-alaṅkāram, n. <id.+. A work on Śiva at Veṅkai, by Civappirakācar; வெங்கைச் சிவபிரான்மீது சிவப்பிரகாசர் பாடிய பிரபந்தங்களுள் ஒன்று.

வெங்கையுலா veṅkai-y-ulā, n. <id.+. A *ulā* poem on Śiva at Veṅkai, by Civappirakācar; வெங்கைச் சிவபிரான்மீது சிவப்பிரகாசர் இயற்றிய உலாப்பிரபந்தவகை.

வெங்கோல் veṅ-kōl, n. <வெம்-மை+கோல்[1]. See வெங்கோன்மை. (*ஏலாதி*, 10.)

வெங்கோலன் veṅkōlaṉ, n. <வெங்கோல். Tyrant, cruel ruler; கொடுங்கோலையுடைய மன்னன். *வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன்* (*குறள்*, 563).

வெங்கோன்மை veṅkōṉmai, n. <id. Cruel government; tyrannical rule; கொடுங்கோல்.

வெச்சம் veccam, n. [T. *bejjamu*.] A defect in rubies; மாணிக்கக் குற்றவகை. *வெச்சம் பொரிவு* (*கல்லா*. 98).

வெச்சமுது veccamutu, n. <வெச்சு+அமுது. Cooked food; சமைத்த உணவு. *வெச்சமுது மணடபமும்* (T. A. S. i, 100).

வெச்சு veccu, n. <வெய்து. Heat; வெம்மை.

வெச்சுவெச்செனல் veccuveccenal, n. See வெச்செனல். (W.)

வெச்சுவெந்நீர் veccu-vennīr, n. <வெச்சு+. Hot water; சுடுநீர். (*யாழ். அக*.)

வெச்செனல் veccenal, n. <வெச்சு. [T. *veccana*, K. *beccane*.] Expr. of (a) being hot, becoming heated; வெம்மைக்குறிப்பு. *தணணென்று வெச்சென்று* (*குமர. பிர. மீனுட். பிள்ளைத்*. 1): (b) being harsh; கடுமையாதற் குறிப்பு. *தமநீஞ் சொல் வெச்சென்றிடச் சொல்லி* (*சீவக*. 2015).

வெச்செனவு veccenavu, n. <வெச்செனல். Heat; சூடு. *தணணெனவும் வெச்செனவுந் தந்து* (*சேதுபு. கடவுள்*. 3).

வெசவி vēcavi, n. [T. *vēsavi*, K. *besige*.] Hot weather; உஷ்ணகாலம்.

வெஞ்சம்[1] veñcam, n. Corr. of வஞ்சம்[1].

வெஞ்சம்[2] veñcam, n. cf. வெஞ்சினம்[1]. Anger; கோபம். (*யாழ். அக*.)

வெஞ்சமம்[1] veñ-camam, n. <வெம்-மை+சமம்[2]. (Mus.) A melody-type of the *pālai* class; பாலைப்பண்வகை. (*நமபியகப்*.)

வெஞ்சமம்[2] veñ-camam, n. <id.+சமம்[3]. War, battle; போர். *விளிந்தா ரொழிந்தார வெஞ்சமத்தில்* (*பாரத. பனனிரணடாம*. 73).

வெஞ்சமன் veñ-camaṉ, n. <id.+சமன்[2]. Yama; யமன். (W.)

வெஞ்சனபண்டாரம் veñcaṉa-paṇṭāram, n. <வெஞ்சனம+. See வெஞ்சனம், 1. *வெஞ்சனபணடாரம கொள்ளவும்* (S. I. I. iv, 292).

வெஞ்சனம் veñcaṉam, n. <*vyañjana*. 1. Vegetable relish; சமைத்த கறியுணவு. *Colloq*. 2. Condiment; கறிக்குதவும் பண்டம். 3. Sauce; குழம்பு. (W.) 4. Consonant; மெய்யெழுத்து. (W.)

வெஞ்சிலைச்செல்வன் veñ-cilai-c-celvaṉ, n. <வெம்-மை+சிலை[3]+. Vīrabhadra; வீரபத்திரன். (W.)

வெஞ்சினம்[1] veñ-ciṉam, n. <id.+. Extreme anger; கடுங்கோபம். *வெஞ்சின மின்மையும்* (*சிறுபாண*. 210).

வெஞ்சினம்[2] veñciṉam, n. See வெஞ்சனம், 1, 2, 3. *வெஞ்சினஙகளென்றும் விருமபாளே* (*தனிப்பா*. i, 304, 25).

வெஞ்சுடர் veñ-cuṭar, n. <வெம்-மை+. Sun; சூரியன். *வெஞ்சுட ரொளியுநீ* (*பரிபா*. 3, 67). (*பிங*.)

வெஞ்சுடர்க்கிரணன் veñ-cuṭar-k-kiraṇaṉ, n. <id.+சுடர்+. Sun; சூரியன். (*திவா*.)

வெஞ்சொல் veñ-col, n. <id.+சொல்[3]. Angry, harsh word; கடுஞ்சொல். *கருமன நச்சு வெஞ்சொற கட்டியஙகாரன்* (*சீவக*. 744).

வெஞ்சோறு[1] veñ-cōṟu, n. <id.+சோறு[3]. Fresh, cooked rice, as hot; சுடுசோறு. *எயிற்றிய ரட்ட வின்புளி வெஞ்சோறு* (*சிறுபாண*. 175).

வெஞ்சோறு[2] veñ-cōṟu, n. <வெண்-மை+id. Plain rice, without curry; கறி சேர்க்கப்படாத சோறு.

வெட்கக்கேடு veṭka-k-kēṭu, n. <வெட்கம்+. Disgrace, shame. See வெட்கம். *சொன்னால் வெட்கக்கேடு; அழுதால் துக்கக்கேடு*.

வெட்கங்கெட்டவன் veṭkaṅ-keṭṭavaṉ, n. <id.+. Shameless fellow; மானமற்றவன்.

வெட்கங்கெடு-த்தல் veṭkaṅ-keṭu-, v. tr. <id.+. To treat shamefully, to disgrace; அவமானப்படுத்துதல். (W.)

வெட்கஞ்சிக்கி vetkañ-cikki, n. <id.+ சிக்கு[4]. Want of modesty; நாணமின்மை. (W.)

வெட்கப்படு-தல் vetka-p-patu-, v. intr. <id.+. 1. To be ashamed; to feel shame; நாணமடைதல். 2. To be bashful; கூச்சமடைதல். அந்தப்பெண் புருஷ்ஷன் வர வெட்கப்படுகிறாள்.

வெட்கப்படுத்து-தல் vetka-p-patuttu-, v. tr. <id.+. To put to shame; to disgrace; அவமானப்படச் செய்தல். (W.)

வெட்கம் vetkam, n. <வெட்கு-. 1. Shame; disgrace; அவமானம். (சூடா.) வெட்கந்தீர்க்கவின்றி நாளே (இராமநா. யுத்த. 32). 2. Modesty, bashfulness, coyness; கூச்சம்.

வெட்கறை vetkarai, n. <id.+அறு-. See வேட்கங்கெட்டவன். (W.)

வெட்காலி vet-kāli, n. perh. வெண்-மை+ கால்[1]. A kind of button tree, l. tr., *Anogeissus latifolia;* மரவகை. (L.)

வெட்கிளுவை vet-kiluvai, n. prob. id. +. Hill balsam tree. See காட்டுக்கிளுவை. (W.)

வெட்கு-தல் vetku-, 5 v. intr. <வெள்கு-. [K. belku.] 1. To be ashamed; நாணப்படுதல். 2. To be bashful; கூச்சப்படுதல். 3. To be afraid; அஞ்சுதல். (W.)

வெட்குவெட்கெனல் vetku-vetkenal, n. Redupl. of வெட்கு-. Expr. of shame; வெட்கக்குறிப்பு. (யாழ். அக.)

வெட்கெனல் vetkenal, n. Expr. of shallowness, superficiality, empty-headedness; வெள்ளறிவினுற்றக் குறிப்பு. வெட்கென்றுரா வெஞ்சொலா லின்புறுவார் (நான்மணி. 73).

வெட்சி vetci, n. 1. Scarlet ixora, m. sh., *Ixora coccinea;* செடிவகை. செங்கால் வெட்சிச் சீறிதழ் (திருமுரு. 21). 2. (Puṟap.) Theme describing a king's follower wearing *vetci* flowers and capturing the cows of the enemy, as an act of war; போர்த்தொடக்கமாக வெட்சிப்பூ வணிந்து பகைவர் நிரையைக் கவர்தலைக் கூறும் புறத்துறை. (தொல். பொ. 57.)

வெட்சிக்கரந்தை vetci-k-karantai, n. <வெட்சி+. (Puṟap.) Theme describing the rescue of cows from the enemies who had captured them; பகைவர் கவர்ந்துகொண்ட ஆனிரையை மீட்பதைக் கூறும் புறத்துறை. (தொல். பொ. 57, உரை.)

வெட்சிமறவர் vetci-maṟavar, n. <id.+. Soldiers who capture the cows of the enemy; பகைவர் நிரையைக் கவரச்செல்லும் மறவர். (தொல். பொ. 58, உரை.)

வெட்சியரவம் vetci-y-aravam, n. <id. +அரவம்[2]. (Puṟap.) Theme describing the tumult of warriors making preparations to go forth to capture enemy's cows; பகைமுனையிடத்து நிரைகவரப் போகுங்கால் உண்டாம் ஆரவாரத்தைக் கூறும் புறத்துறை. (பு. வெ. 1, 3.)

வெட்ட vetta, adj. perh. வெளி[1]. 1. Much; அதிகமான. 2. Clear, plain; தெளிவான. (W.)

வெட்டம் vettam, n. perh. id. [M. *vettam.*] Light; வெளிச்சம். *Nāñ.*

வெட்டரிவாள் vettarivāḷ, n. <வெட்டு- +. Billhook; அரிவாள்வகை.

வெட்டவழி vetta-vaḻi, n. prob. வெட்ட+. Frequented way; beaten track; பலர்செல்லும் நெறி. (W.)

வெட்டவிடி vettaviti, n. Redupl. of விடி[2]. Break of day, early dawn; அதிகாலை. (திவ். திருப்பா. 29, வ்யா. பக். 248.)

வெட்டவெடி-த்தல் vetta-veti-, v. intr. Redupl. of வெடி-. To be wild with anger; அதிகக் கோபங்கொள்ளுதல். வெட்டவெடித்தாக் கோா வெவ்வழலன்காண் (தேவா. 1143, 9).

வெட்டவெளி vetta-veli, n. Redupl. of வெளி[1]. 1. Open plain; திறந்த வெளியிடம். வெட்டவெளியாக விளங்கும் பராபரமே (தாயு. பராபர. 362). 2. Vacuum; சூனியமான இடம். (W.)

வெட்டவெளிச்சம் vetta-veliccam, n. <வெட்ட+. 1. Broad daylight; பெரும் பிரகாசம். (W.) 2. That which is clearly evident; வெளிப்படையானது.

வெட்டவெளியாக vettaveli-y-āka, adv. <வெட்டவெளி+. Publicly; வெளிப்படையாக. (W.)

வெட்டருமூலி vettarāmūli, n. Bristly buttonweed. See நத்தைச்சூரி. (யாழ். அக.)

வெட்டனம் vettaṉam, n. See வெட்டெனம். (யாழ். அக.)

வெட்டனவு vettaṉavu, n. <வெட்டெனல். (யாழ். அக.) 1. Cruelty; கடுமை. 2. Hardness; கெட்டியாயிருக்கை. 3. Force; வலாற்காரம். 4. Being cut and dry; வெடுக்குத்தனம்.

வெட்டாங்கிளி vettāṅ-kiḷi, n. <வெட்டு- +. Large locust; வெட்டுக்கிளி. (W.)

வெட்டாட்டம் vettāttam, n. <id.+. A game of dice; தாய ஆட்டவகை. *Loc.*

வெட்டாந்தரை veṭṭān-tarai, *n.* <வெட்டை[2]+ஆ[6]-+தரை[3]. Dry, hard ground, without vegetation; காய்ந்திறுகிய நிலம். (*யாழ். அக.*)

வெட்டி[1] veṭṭi, *n.* <வெட்டு-. [T. *vaṭṭi*, K. *batte*, M. *veṭṭi*.] 1. Spade; மண்வெட்டி. (W.) 2. Path, road, way; வழி. (*சது.*) *ஒளியெலா நிரம பிய நிலைகளோ வெட்டியே* (*அருட்பா*, vi, *ஆறருமை கூறல்*, ii, 2). 3. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. i, 87.) 4. See வெட்டியான், 1, 2.

வெட்டி[2] veṭṭi, *n.* cf. *vyartha*. [T. *vaṭṭi*, O. K. *bitti*, M. *veṭṭi*.] Uselessness, worthlessness; பயனின்மை. *என்னை வெட்டிக்குபெற்று வேலிக்காலிற் போட்டிருககிறதா ?*

வெட்டி[3]-த்தல் veṭṭi-, 11 *v. intr.* prob. வெட்டு-. To be harsh, rough or violent; கடுகடுப்பாதல். *இத்தனைபோது படுதநின சிறுமை யாலே வெட்டிதது* (*திவ். திருநெடுந.* 21, *வ்யா. பக்.* 188).

வெட்டி[4] veṭṭi, *n.* See வெட்டிவேர். (*யாழ். அக.*)

வெட்டிக்காசு veṭṭi-k-kācu, *n.* <வெட்டி[1] +காசு[3]. An ancient tax; பழைய வரிவகை. (I. M. P. Cg. 1068.)

வெட்டிக்குப்பெறு-தல் veṭṭikku-p-peṟu-, *v. tr.* <வெட்டி[2]+. To get gratis or for nothing; இலவசமாகக் கிடைத்தல். *Colloq.*

வெட்டிக்கொட்டு-தல் veṭṭi-k-koṭṭu-, *v. tr.* <வெட்டு-+. 1. To dig and remove, as earth; மண்முதலியன தோண்டி அப்புறப்படுத்துதல். 2. See வெட்டிச்சாய்-, 3. *அவன் வெட்டிக்கொட்டி ஞனே ?* 3. See வெட்டிக்கொடு-. *Loc.*

வெட்டிக்கொடு-த்தல் veṭṭi-k-koṭu-, *v. tr.* <id.+. 1. To give liberally, used ironically; தாராளமாகக் கொடுத்தல். 2. To help one with; உதவுதல்.

வெட்டிச்சாய்-த்தல் veṭṭi-c-cāy-, *v. tr.* <id.+. 1. To cut down; மரம் முதலியன முறித்து வீழ்த்துதல். 2. To kill outright; கொல்லுதல். (W.) 3. To accomplish, as great things, used ironically; பெருங்காரியங்களைச் செய்தல். *Colloq.* 4. See வெட்டிக்கொடு-. *Loc.*

வெட்டிச்சோறு[1] veṭṭi-c-cōṟu, *n.* <வெட்டி[1]+சோறு[1]. An ancient tax; பழைய வரிவகை. (Insc.)

வெட்டிச்சோறு[2] veṭṭi-c-cōṟu, *n.* <வெட்டி[2]+id. Food given to a useless mouth; தண்டச்சோறு.

வெட்டிது veṭṭitu, *n.* <வெட்டி-மை. [K. *beṭṭitu*.] That which is harsh, rough or violent, as cutting; கடுமையானது. *வெட்டிதாக வார்தமை சொல்ல* (*ரடு*, 3, 5, 7).

வெட்டிநிலம் veṭṭi-nilam, *n.* <வெட்டி[2] +. Untilled land, as lying waste; தரிசுநிலம். *Loc.*

வெட்டிப்பயல் veṭṭi-p-payal, *n.* <id.+. Worthless fellow; உபயோகமில்லாதவன். (W.)

வெட்டிப்பாட்டம் veṭṭi-p-pāṭṭam, *n.* <வெட்டி[1]+பாட்டம்[1]. An ancient tax; பழைய வரிவகை. *வெட்டிப்பாட்டமும . . . எபபோபபட்ட இறைகளு முட்பட* (Insc.).

வெட்டிப்பாடு-தல் veṭṭi-p-pāṭu-, *v. tr.* <வெட்டு-+. To compose a poem in retort, without using the opponent's phraseology; ஒரு புலவன் தன்னைப் பழித்துக்கூறிய சொற்களாலன்றிப் பிறவாறு அவனைப்பழித்துப் பாடுதல்.

வெட்டிப்புடவை veṭṭi-p-puṭavai, *n.* <வெட்டி[1]+. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. i, 91.)

வெட்டிப்புரட்டு-தல் veṭṭi-p-puraṭṭu-, *v.* <வெட்டு-+. *intr.* To work hard, used ironically; கடுமையாக வேலைசெய்தல். *Colloq.*—*tr.* See வெட்டிச்சாய்-, 3.

வெட்டிப்பேச்சு veṭṭi-p-pēccu, *n.* <வெட்டி[2]+. Vain talk, useless speech; வீண் வார்த்தை. *வெட்டிப்பேச்சுப் பேசாதே காரியததை முடி.*

வெட்டிப்பேசு-தல் veṭṭi-p-pēcu-, *v.* <வெட்டு-+. *tr.* 1. To retort, refute; எதிர்த்துச் சொல்லுதல். 2. To rebuke, chide; கண்டித்துச் சொல்லுதல். (*சங். அக.*)—*intr.* To speak harshly; கடுமையாகப் பேசுதல்.

வெட்டிமுறி-த்தல் veṭṭi-muṟi-, *v. tr.* <id.+. See வெட்டிச்சாய்-, 1, 2, 3.

வெட்டிமை veṭṭimai, *n.* <id. 1. Harshness, roughness; கொடுமை. 2. Harshness of speech; பேச்சு நிஷ்டூரம். *உறவற்ற சொல்லாலே வெட்டிமை யெல்லாம் சொல்லவில்லை* (*திவ். திருப்பா.* 15, *வ்யா. பக்.* 149). 3. Anger; சினம். (*சங். அக.*) 4. Service of a Veṭṭiyāṉ; வெட்டியானூழியம். (R. T.)

வெட்டியார்பறையர் veṭṭiyār-paṟaiyar, *n.* <வெட்டியான்+. A sub-division of the Paṟaiyas, who act as drummers on certain ceremonial occasions; சில விசேடகாலங்களிற் பறைகொட்டல் புரியும் பறையர்வகையார். (M.M. 655.)

வெட்டியான் veṭṭiyāṉ, *n.* prob. வெட்டு-. [T. *veṭṭivāḍu*.] 1. A village menial servant; ஓர்வகைக் கிராம ஊழியக்காரன். (C. G.) 2. One

who cremates corpses; சவஞ் சுடுவோன். (யாழ். அக.) 3. An insect that cuts off the leaves of crops; பயிர்களை வெட்டியழிக்கும் பூச்சிவகை. (W.)

வெட்டிரும்பு vettirumpu, n. <id. +. Cold chisel; இரும்புவெட்டும் உளி. (யாழ். அக.)

வெட்டிவரி veṭṭi-vari, n. <வெட்டி¹ + வரி⁵. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. i, 81.)

வெட்டிவார்த்தை veṭṭi-vārttai, n. <வெட்டி² +. See வெட்டிப்பேச்சு. Colloq.

வெட்டிவீரன் veṭṭi-vīraṉ, n. prob. வெற்றி +. Man of supreme heroism; சுத்தவீரன். (யாழ். அக.)

வெட்டிவேதினை veṭṭi-vētiṉai, n. perh. வெட்டி¹ + vētana. An ancient tax; பழைய வரிவகை. (I. M. P. Tj. 94.)

வெட்டிவேர் veṭṭi-vēr, n. <வெட்டி⁴+. [T. vaṭṭivēru, M. veṭṭivēru.] 1. Cuscus-grass. See இலாமிச்சை. (பதார்த்த. 477.) 2. Black cuscus-grass. See குறுவேர்¹. Loc.

வெட்டிவேர்நாணன் veṭṭivēr-nāṇaṉ, n. <வெட்டிவேர் + நாணன்². The Indian Cupid; காமன். (நாமதீப. 59, உரை.)

வெட்டிவேலை veṭṭi-vēlai, n. <வெட்டி² +. Futile enterprise, unprofitable or useless task; பயனற்ற காரியம். Colloq.

வெட்டிவை veṭṭivai, n. See வெட்டிமை, 1, 2, 3. (யாழ். அக.)

வெட்டு¹-தல் veṭṭu-, 5 v. tr. 1. To cut, as with a sword or axe; to cut off; வாள் முதலியன வற்றால் பிளவுபட எறிதல். அரியயன்றலை வெட்டி வட்டாடினா (தேவா. 369, 2). 2. To engrave; எழுத்து முதலியன பொறித்தல். 3. To dig, as a well; தோண்டுதல். கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது. 4. To strike off, as the top of a measure, in measuring grain; தானியவளவில் தலைவழித்தல். தலைவெட்டி அள. 5. To crop, as the head; தலைமயிரைக் கத்தரித்தல். Mod. 6. To cut, as cloth; துணி முதலியன துண்டித்தல். Mod. 7. To take away, remove, as a piece in chess and other games; ஆட்டக்காயைப் பயனற்றதாக நீக்குதல். 8. To injure, mar, as insects; புழுக் கடித்தல். 9. To destroy, annihilate; அழித்தல். 10. To contradict, refute, retort; மறுத்துரைத்தல். எப்போதும் வெட்டியே பேசுகிறான். 11. To speak harshly; கடிந்து பேசுதல்.—intr. 1. To be harsh, rough; கடுமையாதல். வெட்டிய மொழியினன் (கம்பரா. குகப். 9). 2. To flash suddenly, as lightning; பளிச்சென மின்னுதல். மின்னல் வெட்டுகிறது. 3. To have a sudden stroke of fortune; திடீரென்று அதிர்ஷ்ட முண்டாதல். அவனுக்குத் திடீரென ஒரு வெட்டு வெட்டிற்று.

வெட்டு² veṭṭu, <வெட்டு-. n. 1. Cutting; துண்டிப்பு. ஒரு வெட்டில் அந்த மரம் விழும். 2. Wound, cut; வெட்டுதலா லுண்டாம் புண் முதலியன. 3. Engraving; எழுத்து முதலியன பொறிக்கை. கல்வெட்டுச் சாசனம். 4. An ancient small coin; ஒருவகைப் பழைய சிறுநாணயம். தன்னுடைய வெட்டென்றும் (பணவிடு. 143). 5. Cutting by tailor; தையல்துணி வெட்டுகை. Mod. 6. Cropping the hair; மயிர்கத்திரிக்கை. Mod. 7. Removing a piece in chess and other games; ஆட்டக்காயை நீக்குகை. 8. Stroke of fortune; திடீரென வரும் அதிர்ஷ்டம். அவனுக்குத் திடீரென ஒரு வெட்டு வெட்டிற்று. இரண்டாயிர ரூபா கிடைத்தது. 9. Ostentation, pomp; பகட்டு. Loc. 10. Cunning, hypocrisy, deceit; வஞ்சனை.—int. An expression used in driving away dogs; நாயை ஓட்டும்போது கூறுஞ் சொல். Loc.

வெட்டுக்கட்டை veṭṭu-k-kaṭṭai, n. <வெட்டு +. Stump; கிளையற்ற அடிமரம்.

வெட்டுக்கத்தி veṭṭu-k-katti, n. <id. +. Cleaver, chopper; கத்திவகை. (C. G.)

வெட்டுக்கல் veṭṭu-k-kal, n. <id. +. Laterite. See சொறிக்கல். Loc.

வெட்டுக்கன்று veṭṭu-k-kaṉṟu, n. perh. id. +. Weaned calf; பால்மறந்த கன்று. (யாழ். அக.)

வெட்டுக்காடு veṭṭu-k-kāṭu, n. <id. + காடு¹. Jungle land cleared and brought under cultivation; திருத்தியமைத்த காட்டுநிலம். (R. T.)

வெட்டுக்காயம் veṭṭu-k-kāyam, n. <id. + காயம்². Cut, incised wound; வெட்டினாலுண்டாம் புண். (M. L.)

வெட்டுக்கால் veṭṭu-k-kāl, n. <id. + கால்¹. An inauspicious sign or mark in cattle; மாட்டின் தீச்சுழிவகை. (பெ. மாட்.)

வெட்டுக்கிளி veṭṭu-k-kiḷi, n. <id. +. Large grasshopper, locust. See மழைச்சிளி, 1. (W.)

வெட்டுக்குத்து veṭṭu-k-kuttu, n. <id. +. Fighting with sharp weapons; கத்தி முதலிய கூரான ஆயுதங்களைக் கொண்டு செய்யுஞ் சண்டை.

வெட்டுக்குத்துப்பழி veṭṭukkuttu-p-paḻi, n. <வெட்டுக்குத்து +. See வெட்டுப்பழி. Colloq.

வெட்டுக்குருத்து veṭṭu-k-kuruttu, n. <வெட்டு +. Shoot sprouting in a lopped tree; வெட்டுப்பட்ட இடத்திற் றோன்றுங் குருத்து. (திவா.)

வெட்டுக்குளம்பு vettu-k-kuḷampu, *n.* <id.+. Cloven hoof; கால்நடையின் பிளந்துள்ள பாதம். (அபி. சிந்.)

வெட்டுக்கூர் veṭṭu-k-kūr, *n.* <id.+. Pointed nail; கூராணி. *Loc.*

வெட்டுச்சட்டை veṭṭu-c-caṭṭai, *n.* <id. +சட்டை[1]. A kind of jacket for girls; பெண்களணியும் ஒருவகை அங்கி. (J.)

வெட்டுண்(ணு)-தல் veṭṭuṇ-, *v. intr.* <id.+. To be cut; முறிபடுதல்.

வெட்டுணி veṭṭuṇi, *n.* prob. வெட்டுணு-. (W.) 1. Disobedient child; கீழ்ப்படியாத பிள்ளை. 2. Villain; துஷ்டன்.

வெட்டுத்தட்டு veṭṭu-t-taṭṭu, *n.* perh. வெட்டு + தட்டு[2]. Ear of a drum; பறையின் வாய்வார். (W.)

வெட்டுத்தாக்கு veṭṭu-t-tākku, *n.* <id.+ தாக்கு[2]. Excavated pit; மண்ணெடுத்த குழி. *Loc.*

வெட்டுத்தாவு veṭṭu-t-tāvu, *n.* <id.+ தாவு[5]. Tank pit; deep portion of a tank; குளம் ஏரி முதலியவற்றில் வெட்டப்பட்ட ஆழமான பகுதி. (R. T.)

வெட்டுப்பகை veṭṭu-p-pakai, *n.* <id.+. See வெட்டுப்பழி. இட்டவனை இராவிட்டால் வெட்டுப்பகை.

வெட்டுப்படு-தல் veṭṭu-p-paṭu-, *v. intr.* <id.+. See வெட்டுண்-. வெட்டுப்பட்டாய் மகனே தலைநாளின் விதிப்படியே (தனிப்பா. 1, 149, 54).

வெட்டுப்படை veṭṭu-p-paṭai, *n.* <id.+. Army of swordsmen; வாட்படை. (W.)

வெட்டுப்பழி veṭṭu-p-paḻi, *n.* <id.+. Mortal feud; தீராப்பகை. அவனுக்கும் இவனுக்கும் வெட்டுப்பழி குத்துப்பழியாக இருக்கிறது.

வெட்டுப்பாக்கு veṭṭu-p-pākku, *n.* <id. +பாக்கு[1]. Split areca nut of inferior quality; இரண்டாகத் துண்டிக்கப்பட்ட மட்டமான பாக்கு. *Loc.*

வெட்டுப்பாக்குவெட்டி veṭṭu-p-pākku-veṭṭi, *n.* <id.+. A kind of areca-nut cracker; பாக்குவெட்டிவகை. *Nāñ.*

வெட்டுப்பூச்சி veṭṭu-p-pūcci, *n.* <id.+. See வெட்டுக்கிளி.

வெட்டுமருந்து veṭṭu-maruntu, *n.* <id. +. Medicinal herbs, roots, barks, etc., as obtained by cutting; வெட்டிக் கொள்ளப்படும் மருந்துவகை. *Nāñ.*

வெட்டுமாலை veṭṭu-mālai, *n.* <id.+perh. மாலை[2]. See வெட்டுத்தாக்கு. *Loc.*

வெட்டுமாறன் veṭṭumāṟaṉ, *n.* perh. id. +மாறு-. An intoxicant; வெறிதரும் ஒருவகைப் பண்டம். (யாழ். அக.)

வெட்டுமுளை veṭṭu-muḷai, *n.* <id.+. Money recently minted; புதிதா யடிக்கப்பட்ட நாணயம். (W.)

வெட்டுரை[1] veṭṭurai, *n.* <id.+உரை[5]. Cutting word, harsh speech; வெடுவெடுப்பான பேச்சு. (யாழ். அக.)

வெட்டுரை[2] veṭṭurai, *n.* <id.+உரை[4]. See வெட்டுரைப்பணம். (W.)

வெட்டுரைப்பணம் veṭṭurai-p-paṇam, *n.* <வெட்டுரை[2]+பணம்[2]. Bad coin; counterfeit coin; கள்ளநாணயம். (யாழ். அக.)

வெட்டுவாய் veṭṭu-vāy, *n.* <வெட்டு-+. (W.) 1. Gash, opening of a cut; அறுபட்ட புண்வாய். 2. Joining; பொருத்து.

வெட்டுவாலி veṭṭu-vāli, *n.* <id.+வால்[2]. See வெட்டுக்கிளி. (W.)

வெட்டுவாள் veṭṭu-vāḷ, *n.* <id.+வாள்[1]. A kind of chopper; வெட்டுக்கத்திவகை. (யாழ். அக.)

வெட்டுவெட்டெனல் veṭṭu-veṭṭeṉal, *n.* Expr. of (a) being angry; சினக்குறிப்பு: (b) being harsh or rough; கடுமைக்குறிப்பு. (யாழ். அக.): (c) being frightened; அச்சக்குறிப்பு: (d) dazzling; ஒளிவிடற்குறிப்பு. வெயில் வெட்டுவெட்டென்று எறிக்கிறது. (W.)

வெட்டுவேர் veṭṭuvēr, *n.* See வெட்டிவேர், 1. (பிங.)

வெட்டுவேளாண்மை veṭṭu-vēḷāṇmai, *n.* <வெட்டு-+. Harvest; அறுவடை. (W.)

வெட்டுளி veṭṭuḷi, *n.* <id.+உளி[1]. See வெட்டிரும்பு. (C. E. M.)

வெட்டெனம் veṭṭeṉam, *n.* perh. *vēs-ṭana.* Ceremonial commencement of the festival of a village deity; கிராமதேவதைக்குத் திருவிழாத் தொடங்குகை. *Loc.*

வெட்டெனல்[1] veṭṭeṉal, *n.* perh. வெட்டை[2]. Expr. of harshness, violence, severity; கடுமைக்குறிப்பு. வெட்டெனப் பேசன்மின் (தேவா. 1241, 3).

வெட்டெனல்[2] veṭṭeṉal, *n.* prob. வெற்றெனல். Expr. of giving consent by silence; மௌனமாய் இசைதற் குறிப்பு. ஆய்ச்சி . . . குறுங்கயிற்றாற்கட்ட வெட்டென் றிருந்தான் (திவ். பெரியதி. 5, 9, 7).

வெட்டெனவு veṭṭeṉavu, *n.* <வெட்டெனல்[1]. 1. Severity, harshness; கடுமை. 2.

Hardness; வன்மை. 3. That which is severe or hard; வன்மையானது. வெட்டெனவு மெதனைவை வெல்லாவாம (மூதுரை, 33).

வெட்டேறு veṭṭēṟu, n. cf. விட்டேறு. [K. biṭṭēṟu.] A weapon; ஆயுதவகை. (யாழ். அக.)

வெட்டை[1] veṭṭai, n. [T. veṭṭa, K. veṭṭe.] 1. Heat; வெப்பம். அனல் வெட்டையாற் சுருண்டு (இராமநா. உயுத். 14). 2. Heat of the ground; நிலக்கொதி. (W.) 3. Passion, lust; காமவிச்சை. காமவெட்டையிலே மதிமயங்கி (தனிப்பா. i, 195, 10). 4. The whites, leucorrhoea; நோய்வகை. 5 Gonorrhoea; நோய்வகை.

வெட்டை[2] veṭṭai, n. <வெட்டு[2]. cf. vyartha. 1 Emptiness; வெறுமை. 2. Uselessness; worthlessness; பயனின்மை. தங்கம் வெட்டையாய்ப் போய்விட்டது. 3. See வெட்டாந்தரை. (J.) 4. Ruin; நாசம். அவன் தொட்டவிட மெல்லாம வெட்டைதான். Loc. 5. Hardness, as of metals; உலோக முதலியவற்றின் கடினத்தன்மை. (W.)

வெட்டை[3] veṭṭai, n. <வெளி[1]. Open land; வெளி. (சங். அக.)

வெட்டைப்பிடிப்பு veṭṭai-p-piṭippu, n. <வெட்டை[1]+. (M. L.) 1. Rheumatism, sciatica; வாயுப்பிடிப்பு நோய்வகை. 2. Inflammation of the testicles, Orchitis; விதைவீக்கம்.

வெட்டைவெளி veṭṭai-veḷi, n. <வெட்டை[3]+வெளி[1]. See வெட்டவெளி, 1. (சங். அக.)

வெட்டொழிவு veṭṭoḻivu, n. <வெட்டு+. Allowance for improvements made on land by the tenant; நிலத்தைப் பண்படுத்திய செலவிற்குக் கொடுக்குந் தொகை. Nāñ.

வெட்பகடம் veṭ-pakaṭam, n. prob. வெள்[1] +. Outward show; வெளிப்பகட்டு. (J.)

வெட்பாடம் veṭ-pāṭam, n. <id.+பாடம்[2]. Lesson learnt merely by rote; வாய்ப்பாடம். (J.)

வெட்பாலை veṭ-pālai, n. <id.+பாலை[1]. 1. Dyeing rosebay, Wrightia; மரவகை. (பிங்.) 2. Ivory-tree, m. tr., Wrightia tinctoria; மரவகை. 3. Woolly dyeing rosebay, m. tr., Wrightia tomentosa; மரவகை. 4. Conessi bark. See குடசப்பாலை, 1.

வெட்பாலையரிசி veṭpālai-y-arici, n. <வெட்பாலை+. A medicinal drug; மருந்துச் சரக்குவகை. (மூ. அ.)

வெட்பாவட்டை veṭ-pāvaṭṭai, n. <வெள்[1] +. A species of pāvaṭṭai plant; பாவட்டை வகை. (W.)

வெட்புகார் veṭ-pukār, n. <id.+புகார்[2]. Rainless cloud; மழைநீரற்ற மேகம். (யாழ். அக.)

வெட்புலம் veṭ-pulam, n. <id.+. Bare ground; வெற்றிடம். வெட்புலந் தனனிற் சேரக மிஞ்சவே (பாரத. நச்சுப. 33).

வெட்பூல் veṭ-pūl, n. <id.+. See வெள்ளைப்பூலா. (சங். அக.)

வெடங்குருணி veṭaṅkuruṇi, n. [M. viṭaṅkoraṇa.] Stag's-horn trumpet-flower tree, m. tr., Stereospermum xylocarpum; மர வகை. (M. M.)

வெடி[1]-த்தல் veṭi-, 11 v. intr. cf. viḍ. 1. To crack, as earthenware; to break, part, as the ground; to split; to burst open; பிளவுடைதல். வெடிக்கின்ற விபபியுணீதநிலம (தஞ்சைவா. 232) 2. To burst with a noise; ஓசையெழ பிளவுறுதல். 3 To explode; அதிர்வேட்டு முதலியன எழுதல். 4. To make an explosive noise; வெடியோசை யுண்டாதல். வெடித்த வேலை (கம்பரா. இலங்கையெரி. 10). 5. To blossom; மலர்தல். வெடித்த போ தெல்லாம . . . கொய்தான் (செவ்வந்திப்பு. உறை யூரழி. 47). 6. To shoot forth, as tender leaves; வெளிக்கிளம்புதல். இந்தச் செடியில மூன்றிலை வெடித்திருக்கிறது. 7. To stiffen and stand upright; to be raised, as a beast's tail; விறைத்து மேலே கிளம்புதல். வெடித்தவாற் சிறுகன்று (அரிச். பு. விவாக. 267). 8. To burst with envy; பொறாமையால் துடித்தல்.

வெடி[2] veṭi, n. <வெடி-. 1. Explosion, as of a gun; வேட்டு. 2. Noise; ஓசை. மடிவிடு வீளையர் வெடிபடுத தெதிர (குறிஞ்சிப. 161). 3. Thunder; இடி. (சூடா.) 4. Gun; துப்பாக்கி Loc. 5. Fireworks; வாணம். 6. See வெடியுப்பு. (சங். அக.) 7. A kind of cardamom; சிற்றேலம். (மூ. அ.) 8. Fissure, crevice, cleft, split; பிளவு. வெடியோடெ வெம்கானம (ஐங். ஐம. 36). 9. Hate; பகை. வெடிபடு போர்தொழில் காணா (சீவக. 776). 10. Ruin; கேடு. வெடிபடக் கடந்து (மதுரைக. 233). 11. Fear; அச்சம். (பிங்.) 12. Shooting up; நிமிர்ந்தெழுகை. வெடி வேய் கொள் வதுபோல (புறநா. 302). 13. Leaping; தாவுகை. வெடிபோன பருவரலை (அரிச். பு. விவாக. 218). 14. Fragrant incense; நறும்புகை. (பிங்.) 15. Good smell, perfume; நறுமணம். (W.) 16. Evil odour, bad smell; துர்க்கந்தம். வெடிதரு தலையினர் (தேவா. 912, 6). 17. Toddy; கள். (சூடா.) 18. A cant term, in dice-play; கவறுருட்டத்து வழங்கும் ஒரு குழூஉக்குறி. விஞ்சிய மகிழ்வொடு வெடியென் றேறுவார் (கந்தபு. சுயமுகனுற். 167). 19. Big lie; பெரும்பொய். Nāñ.

வெடி[3]-தல் veṭi-, 4 v. intr. <விடி[1]-. See விடி[1]-. போதெல்லா மென்றாழ் வெடியாதபோதிற கொய்தான் (செவ்வந்திப்பு. உறையூரழி. 47).

வெடி⁴ veṭi, n. <வெடி³-. Venus, as the morning star; விடிவெள்ளி. (பிங்.)

வெடி⁵ veṭi, n. <வெளி¹. Open plain; வெளி. (பிங்.)

வெடிக்கயிறு veṭi-k-kayiṟu, n. <வெடி² +. Quick-match; வெடிமருந்திலிடுந் திரிக்கயிறு.

வெடிகாரம் veṭi-kāram, n. <வெடி¹-+ காரம்¹. [K. beḷigāra.] A kind of salt; உப்புவகை. (மூ. அ.)

வெடிகிரந்தி veṭi-kiranti, n. <id.+கிரந்தி¹. Venereal ulcer; மேகப்புண்வகை. (W.)

வெடிகுரல் veṭi-kural, n. <id.+குரல்³. 1. Hoarse voice; இயல்புமாறிய குரல். 2. (Mus.) Discordant note or voice; இசைக்கு மாறுபட்ட ஓசை. காகுளி கீழோசை வெடிகுர லுசி (திருவிளை. விறகுவிற். 30).

வெடிகொள்(ளு)-தல் veṭi-koḷ-, v. intr. <வெடி²+. 1. To shoot up; மேலெழுதல். (புறநா. 302.) 2. To burst; வெடித்தல். வெடி கொண்ட பித்தியுமுடைதர (பாரத. பதின்மூன் 121). 3. To be shot, as with a gun; துப்பாக்கியால் சுடப்படுதல்.

வெடிச்சுடு-தல் veṭi-c-cuṭu-, v. intr. <id. +. (W.) 1. To fire a gun; துப்பாக்கி சுடுதல். 2. To cause an explosion; வேட்டுக் கிளப்புதல்.

வெடிசன்னி veṭi-caṉṉi, n. prob. வெடி¹- + சன்னி¹. A kind of caṉṉi; சன்னிவகை. (யாழ். அக.)

வெடிசிரிப்பு veṭi-cirippu, n. <id.+. Side-splitting laughter, loud laugh; பெருஞ் சிரிப்பு. (சிலப். 15, 64, உரை.)

வெடிசூலை veṭi-cūlai, n. prob. id.+. A kind of colic; சூலைநோய்வகை. (சங். அக.)

வெடித்தகுரல் veṭitta-kural, n. <id.+ குரல்³ 1. See வெடிகுரல், 1. 2. Loud voice; ஓரத்தகுரல். (W.)

வெடித்தசொல் veṭitta-col, n. <id.+ சொல்³. Harsh speech; வெடுவெடுப்பான பேச்சு. (யாழ். அக.)

வெடிதீர்-தல் veṭi-tīr-, v. intr. <வெடி²+. To fire a shot; குண்டுபோடுதல். (W.)

வெடிநாற்றம் veṭi-nāṟṟam, n. <id.+. 1. Bad smell; துர்க்கந்தம். (இராமநா. உயுத. 74.) 2. Smell of gunpowder when it explodes; வெடிமருந்துசுட்ட வாசனை.

வெடிப்பஞ்சு veṭi-p-pañcu, n. <id.+. Gun cotton; வெடிமருந்தாகச் செய்த பஞ்சு. (C. E. M.)

வெடிப்பட்டடை veṭi-p-paṭṭaṭai, n. <id. +பட்டடை¹. A machine with pistolets. See போட்டில். (W.)

வெடிப்படி-த்தல் veṭippaṭi-, v. intr. <வெடிப்பு+அடி-. 1. To emit bad odour; துர் நாற்றம் வீசுதல். Loc. 2. To be qualmish, queasy, as from a bad odour; வாந்திக்குணமுண் டாதல். (W.) 3. To be disgusting; வெறுப்பாதல். (W.)

வெடிப்பந்துச்செண்டு veṭi-p-pantu-c-ceṇṭu, n. <வெடி²+பந்து²+செண்டு¹. A ball of flowers; ஒருவகைப் பூச்செண்டு. Loc.

வெடிப்பந்துப்பூ veṭi-p-pantu-p-pū, n. <id.+id.+பூ³. See வெடிப்பந்துச்செண்டு. Loc.

வெடிப்பு veṭippu, n. <வெடி¹-. 1. Explosion; ஓசையோடு வெடித்து எழுகை. 2. Crevice, fissure, gap; பிளப்பு. (சங். அக.) 3. Ruin; விநாசம். வெடிப்பு நின்பசுநிரை மேயக்கப் போகசு (திவ். திருவாய். 10, 3, 6). 4. Bad smell; துர்நாற்றம். 5. Disgust; வெறுப்பு. (W.) 6. Objectionable language; குற்றமான வார்த்தை. பிறிதோர் வெடிப்பு மொழிதகறியேன் (அருட்பா, vi, திருவருட்பெருமை. 10). 7. Strictness; sternness; கண்டிப்பு. Loc. 8. Splendour; சிறப்பு. காரியம் வெடிப்பாய் நடந்தது.

வெடிபகிரதி veṭipakīrati, n. Alum. See படிக்காரம். (சங். அக.)

வெடிபடு-தல் veṭi-paṭu-, v. intr. <வெடி²+. 1. To explode with a loud noise; பேரோசை யுண்டாதல். வெடிபட முழங்குஞ் சொல் லான் (சீவக. 265). 2. To scatter; சிதறுதல். மாற் றுரா வெடிபட் டோடல் (புறநா. 93). 3. To fear; அச்சமுறுதல். வெடிபட்டு வீற்றுவீற்றோடு மயிலினம் போல (களவழி. 29).

வெடிபலவன்¹ veṭi-palavaṉ, n. <வெடி¹- +பலவம்¹. A kind of plant whose seed-pods burst with noise; பூடுவகை. (W.)

வெடிபலவன்² veṭi-palavaṉ, n. <வெடி² +. A kind of greens; படுவங்கீரை. (மலை.)

வெடிபாணவுப்பு veṭi-pāṇa-v-uppu, n. <வெடி¹-+பாணம்¹+. See வெடியுப்பு. இரதுப்பு வெடிபாணவுப்பு (விறலிவிடு. 619).

வெடிபோடு-தல் veṭi-pōṭu-, v. intr. <வெடி²+. See வெடிதீர்-.

வெடிமருந்து veṭi-maruntu, n. <id.+. Gunpowder; வெடிப்பதாற் குண்டு முதலியவற்றை வெளிக்கிளப்பும் வாணமருந்து. (W.)

வெடியல்[1] veṭiyal, n. <வெடி[1]-. Explosion. See வேடி[2], 1. (W.)

வெடியல்[2] veṭiyal, n. <வெடி[3]-. Dawn. See விடியல்[1].

வெடியுப்பீயம் veṭiyuppīyam, n. <வெடியுப்பு + ஈயம்[1]. Nitrate of lead, *Plumbi nitras*; ஈயவுப்பு வகை.

வெடியுப்பு veṭi-y-uppu, n. <வெடி[2]+. Saltpetre, nitre; வேடிமருந்துக்கு உதவும் உப்பு வகை (பதார்த்த. 1092.)

வெடியுப்புத்திராவகம் veṭiyuppu-t-tirāvakam, n. <வெடியுப்பு+. Nitric acid; வெடியுப்பினின்றும் எடுக்கப்படுந் திராவகம். (W.)

வெடியுப்புமண் veṭiyuppu-maṇ, n. <id. + மண்[1]. Soil containing saltpetre or potash; வெடியுப்புச்சத்துள்ள மண்.

வெடில் veṭil, n. <வெடி[2]. 1. Explosion. See வேடி[2], 1. (W.) 2. Foul smell, stink; துர்க்கந்தம். (யாழ். அக.)

வெடிலுப்பு veṭil-uppu, n. <வெடில்+. See வேடியுப்பு. (W.)

வெடிவால் veṭi-vāl, n. <வெடி[2] + வால்[2]. An inauspicious mark in the tail of cattle; மாட்டுக்குற்றவகை. (மாட்டுவை. சிந.)

வெடிவு veṭivu, n. <வெடி[3]-. 1. Dawning; விடிகை. 2. Dawning of better days; நற்காலம் வருகை. வெடிவுகாலம வாராதா. 3. Dawn; விடியற்காலம்.

வெடிவை-த்தல் veṭi-vai-, v. <வெடி[2]+. tr. 1. To shoot with a gun; துப்பாக்கியாற் சுடுதல் 2. To seek an opportunity to destroy or injure; கேடுக்கப் பார்த்தல்.—intr. 1. To make a surprisingly false statement; திகைக்கும்படி பொய்வார்த்தை சொல்லுதல். 2. To foment or start a quarrel; சண்டை மூட்டுதல். இல்லாவற்றை யெல்லாஞ் சொல்லி அவன் வெடிவைத்துவிட்டான்.

வெடுக்கன் veṭukkaṉ, n. <வெடுக்கு. 1. Churlish, crabbed person; கடுகடுப்புள்ளவன். (W.) 2. Angry person; கோபி. (யாழ். அக.)

வெடுக்கு veṭukku, n. cf. வெடுக்கெனல். 1. See வேடுவேடுப்பு. (W.) 2. See வேட்டேனவு. (யாழ். அக.)

வெடுக்குச்சொடுக்கு veṭukku-c-coṭukku, n. Redupl. of வெடுக்கு. See வேடுவேடுப்பு. *Loc.*

வெடுக்குவெடுக்கெனல் veṭukku-veṭukkeṉal, n. Redupl. of வெடுக்கெனல். See வேடுக்கேனல். (W.)

வெடுக்கெனல் veṭukkeṉal, n. Onom. expr. of (a) noise of breaking; ஒடிதலின் ஓசைக்குறிப்பு. அஷ்டதிக்கெச தந்தங்களை வெடுக்கென் றொடித்த (இராமநா. ஆரணி. 20): (b) suddenness and unexpectedness; திடீரெனற்குறிப்பு: (c) quickness; விரைவுக்குறிப்பு. காலின் முட்டைக்கவும வெடுக்கென்றனைத் தெடுத்தால் (தாயு. சுகவாரி. 5): (d) churlishness in talk; பேச்சிற் கடுகடுப்பாயிருத்தற் குறிப்பு. வெடுக்கென்று பேசுகிறான்: (e) shooting pain; குத்துநோவுக் குறிப்பு.

வெடுத்தலாம் veṭuttalām, n. Ashy babool. See விடத்தேரை. (L.)

வெடுப்பு veṭuppu, n. <வெடிப்பு. See வேடுவேடுப்பு. வெடுப்புககாட்டுதல். (யாழ். அக.)

வெடுவெடு-த்தல் veṭuveṭu-, 11 v. intr. <வெடுவெடெனல். 1. To quiver with rage; கோபத்தாற் படபடத்தல். வெடுவெடுத் தெழுந்தவன் றனுற்றலை யழிக்கவல்லார (தேவா. 776, 1). 2. To speak roughly; கடுகடுப்பாய்ப் பேசுதல்.

வெடுவெடுத்தசொல்லி veṭuveṭutta-colli, n. <வெடுவெடு- + சொல்[3]. One who is churlish in speech; கடுஞ்சொற் கூறுபவ-ன்-ள். (W.)

வெடுவெடுத்தவன் veṭuveṭuttavaṉ, n. <id. See வேடுக்கன். (W.)

வெடுவெடுப்பு veṭuveṭuppu, n. <id. Churlishness, crabbedness; கடுகடுப்பு. (W.)

வெடுவெடெனல் veṭuveṭeṉal, n. Onom. expr. of (a) laughing loudly or boisterously; பெருஞ் சிரிப்பின் ஒலிக்குறிப்பு. (பிங.) வெடுவெடென்ன நக்கு (பதினொ. திருவாலங்கா. மூத்த. 2): (b) shivering with cold; நடுக்கக் குறிப்பு. குளிர் வெடுவெடென் றுட்டுகிறது: (c) being quick; விரைவுக் குறிப்பு: (d) being angry, petulant; சினக் குறிப்பு. வெடுவெடென்று பேசுகிறான்: (e) being thin or slender; ஒல்லியாயிருத்தற் குறிப்பு.

வெண்கடம்பு veṇ-kaṭampu, n. <வெண்மை+. Seaside Indian oak, l. tr., *Barringtonia racemosa*; மரவகை. வெண்கடம்பு பந்தணிந்தவே (சீவக. 1650).

வெண்கடல் veṇ-kaṭal, n. <id.+. Sea of milk. See பாற்கடல். (பெருங. உஞ்சைக். 57, 113, அரும்.)

வெண்கடன் veṇ-kaṭaṉ, n. <id.+. See வேண்ணணிலைக்கடன். *Loc.*

வெண்கடுகு veṇ-kaṭuku, n. <id.+. White mustard; கடுகுவகை. (பிங.)

வெண்கடுப்பு veṇ-kaṭuppu, n. <id.+. Inflammation of the conjunctival membrane of the eye, conjunctivitis; கண்ணோய்வகை. (M.L.)

வெண்கண் veṇkaṇ, n. < வெங்கண். A fish. See வேங்கண், 6. (W.)

வெண்கண்டல் veṇ-kaṇṭal, n. < வெண்-மை +. cf. வெங்கண்டல். 1. White mangrove, s. tr., *Avicennia officinalis;* சிறுமரவகை. (L.) 2. Papery-barked obtuse-leaved mangrove, m. tr., *Avicennia officinalis-typica;* மரவகை.

வெண்கதிர் veṇ-katir, n. < id. +. See வெண்கதிரோன். (இலக். அக.)

வெண்கதிரோன் veṇkatirōṉ, n. < வெண் கதிர். The moon; சந்திரன். (W.)

வெண்கமலம் veṇ-kamalam, n. < வெண்-மை + கமலம்¹. 1. White lotus; வெண்டாமரை. 2. A hell; நரகவகை. (சிவதரு. சுவர்க்கநரக. 114.)

வெண்கமலை veṇ-kamalai, n. < id. + கமலை¹. Sarasvatī; சரசுவதி. (இலக். அக.)

வெண்கரு veṇ-karu, n. < id. + கரு³. The white of egg; முட்டையின் வெள்ளைக்கரு.

வெண்கருவிளை veṇ-karuviḷai, n. < id. +. See வெண்காக்கணம். (சங். அக.)

வெண்கல் veṇ-kal, n. < id. +. [M. veṅkal.] 1. Quartz; வெள்ளைக்கல்வகை. (C. E. M.) 2. White marble; சலவைக்கல். (W.)

வெண்கலநிமிளை veṇkala-nimiḷai, n. < வெண்கலம் +. Bismuth pyrites. See நிமிளை.

வெண்கலப்பட்சி veṇkala-p-paṭci, n. prob. id. +. A bird; பறவைவகை. *Loc.*

வெண்கலப்பானை veṇkala-p-pāṉai, n. < id. +. Pot of bronze; வெண்கலத்தால் வார்க்கப்பட்ட பாத்திரவகை.

வெண்கலம்¹ veṇ-kalam, n. < வெண்-மை + கலம்¹. [M. veṅkalam.] Bell-metal, bronze, an alloy of copper and tin; செம்பும் வெள்ளீயமும் கலந்து உருக்கி யுண்டாக்கும் கலப்புலோகம். (பிங்.) வெண்கலப்பத்திரங் கட்டி விளையாடி (திவ். பெரியாழ். 1, 9, 5).

வெண்கலம்² veṇ-kalam, n. < id. + காலம். Day; நாள். (அக. நி.)

வெண்கலி veṇ-kali, n. < id. + கலி². (Pros.) See வெண்கலிப்பா. (W.)

வெண்கலிப்பா veṇkali-p-pā, n. < வெண் கலி + பா⁴. (Pros.) A kind of *kali* verse with *veṇ-ṭaḷai;* வெண்டளை பெற்றுவருங் கலிப்பாவகை.

வெண்கவி veṇ-kavi, n. < வெண்-மை + கவி³. 1. *Veṇpā* verse. See வெண்பா. 2. Verse, not pregnant with ideas; பொருளாழமற்ற கவி.

வெண்களமர் veṇ-kaḷamar, n. < id. +. 1. Inhabitants of the agricultural tract; மருதநில மாக்கள். (தொல். சொல். 16, உரை.) 2. Vēḷāḷas; வேளாளர். (அக. நி.)

வெண்களிற்றரசு veṇ-kaḷiṟṟaracu, n. < id. + களிறு + அரசு². Indra's elephant. See ஐராவதம். வால்வெண்களிற்றரசு வயங்கியகோட்டத்து (சிலப். 5, 143).

வெண்கன்னான் veṇ-kaṉṉāṉ, n. < id. +. Smith working in bell-metal; வெண்கலவேலை செய்யும் கன்னான். வெண்கன்னானுக்குக் கைங்காயம் . . . எல்லாம் வாரப்பித்துப புதிதாகப் பண்ணுகிறது (கோயிலொ. 94).

வெண்காக்கட்டான் veṇ-kākkaṭṭāṉ, n. < id. +. See வெண்காக்கணம். (பதார்த்த. 482.)

வெண்காக்கணம் veṇ-kākkaṇam, n. < id. +. White-flowered mussel-shell creeper. See வெள்ளைக்காக்கணம். (குறிஞ்சிப. 68, உரை.)

வெண்காசம் veṇ-kācam, n. < id. + காசம்⁴. Sore-eyes; கண்ணோய்வகை. (யாழ். அக.)

வெண்காட்டுநங்கை veṇkāṭṭu-naṅkai, n. Wife of Ciru-t-toṇṭar. See திருவெண்காட்டு நங்கை. (அபி. சிந்.)

வெண்காடர் veṇkāṭar, n. Paṭṭiṉattu-p-piḷḷaiyār of Tiru-veṇkāṭu in the Tanjore District. See பட்டினத்துப்பிள்ளையார்.

வெண்காந்தள் veṇ-kāntaḷ, n. < வெண்-மை +. White species of Malabar glory lily, m. cl., *Gloriosa superba;* செடிவகை. (புறநா. 90, உரை.)

வெண்காய்ச்சல் veṇ-kāyccal, n. < id. +. Low fever, *Febricula pyrexia;* சிறுசுரம். (M. L.)

வெண்காயம் veṇ-kāyam, n. < id. + காயம்¹. [M. veṅgāyam.] 1. Onion, *Allium cepa;* பூடுவகை. (W.) 2. Garlic; உள்ளி. (யாழ். அக.)

வெண்காயவெடி veṇkāya-veṭi, n. < வெண் காயம் + வெடி². Squib, a kind of firework; ஒரு வகை எறிவேடி. *Mod.*

வெண்காரம் veṇ-kāram, n. < வெண்-மை + காரம்¹. Borax. See வெங்காரம்¹. எலம்வெண்காரம் (விறலிவிடு. 616).

வெண்காரை veṇ-kārai, n. < id. + காரை². Pounded chunam; அரைத்த சுண்ணம்பு. (யாழ். அக.)

வெண்கால் veṇ-kāl, n. < id. + கால்¹. Leg made of ivory, as of cot, etc.; யானைத்

தந்தத்தாற் செய்த கட்டில் முதலியவற்றின் கால். *வெண்கா லமளி* (பெருங். உஞ்சைக். 33, 63).

வெண்காலி veṇ-kāli, *n.* <id.+காலி[3]. See வெட்காலி. (பதார்த்த. 457).

வெண்காவல் veṇ-kāval, *n.* <id.+. Simple imprisonment. See வெறுங்காவல். *Loc.*

வெண்காவிளை veṇ-kāviḷai, *n.* <id.+. See வெள்ளைச்சாச்சுணம். (பிங்.)

வெண்காவெளி veṇ-kāveḷi, *n.* <id.+ prob. காய்[3]+உளளி. See வெள்ளைப்பூண்டு. (மூ. அ.)

வெண்காவேளை veṇ-kāvēḷai, *n.* <id.+. See வெண்காவிளை. (மூ. அ.)

வெண்காழ் veṇ-kāḻ, *n.* <id.+காழ்[2]. 1. Core of tree; மரத்தின் உள்ளீடு. 2. A small stick, used in hunting rabbits; முயலெறியுந் தடிவகை. *வெண்காழ் காவலா வீச* (ஐங்குறு. 421).

வெண்கிடை veṇ-kiṭai, *n.* <id.+கிடை[3]. White-flowered sola, *Aeschynomene aspera*; நெட்டிவகை. *சிறுகோல் வெண்கிடை* (புறநா. 75).

வெண்கிடைச்சி veṇ-kiṭaicci, *n.* <id.+. See வெண்கிடை. (W.)

வெண்கிழமை veṇ-kiḻamai, *n.* <id.+ கிழமை[1]. Friday; வெள்ளிக்கிழமை. *வெண்கிழமை யமபிகை தரும் வாரததால்* (உபதேசகா. சிவவிரத. 322).

வெண்கிளுவை veṇ-kiḷuvai, *n.* <id.+. A species of thornless balsam; முள்ளில்லாக் கிளுவைமரவகை. (W.)

வெண்கீரி veṇ-kīri, *n.* <id.+கீரி[1]. See வெள்ளைக்கீரி. (W.)

வெண்குட்டம் veṇ-kuṭṭam, *n.* <id.+ குட்டம்[4]. White leprosy; உடலில் வெள்ளையாகப் படரும் குட்டநோய்வகை. (கடம்பு. பு. இலீலா. 118.)

வெண்குடை veṇ-kuṭai, *n.* <id.+. See வெண்கொற்றக்குடை. *மணடலமினசெய் வெண குடை* (சீவக. 860). (பிங்.)

வெண்குமுதம் veṇ-kumutam, *n.* <id.+ குமுதம்[1]. See வெண்ணெய்தல். (யாழ். அக.)

வெண்குன்றி veṇ-kuṉṟi, *n.* <id.+. 1. See வெள்ளைக்குன்றி. (W.) 2. Liquorice-plant. See அதிமதுரம்[2], 1. (மலை.)

வெண்குன்று veṇ-kuṉṟu, *n.* <id.+. A shrine sacred to Skanda. See சுவாமிமலை. (சிலப். குன்றக்குரவை, பாட்டுமடை, 1.)

வெண்குஷ்டம் veṇ-kuṣṭam, *n.* <id.+. See வெண்குட்டம்.

வெண்கூதாளம் veṇ-kūtāḷam, *n.* <id.+. See வெண்டாளி[1]. *வெணகூதாளததுத தணபூங கோதையா* (பட்டினப். 85).

வெண்கெண்டை veṇ-keṇṭai, *n.* <id.+ கெண்டை[1]. White carp, silvery, attaining 12 in. in length, *Cirrhina cirrhosa*; வெண்மை நிறமுடையதும் 12 அங்குலம் வளர்வதுமான கெண்டைமீன்வகை.

வெண்கை veṇ-kai, *n.* <id.+கை[5]. 1. Hand unused to work, தொழில்செய்து பழகாத கை. *வெணகை மகளிர* (பதிற்றுப. 29, 6). 2. Hand wearing conch bangles; சங்குவளை யணிந்த கை. (பதிற்றுப. 29, உரை.) 3. (Nāṭya.) Hand that beats time, without being engaged in gesticulation; அபிநயஞ் செய்யாது தாளத்திற்கு இசைவிடும் கை. *முழவிற் போகிய வெணகை* (பதிற்றுப. 61. 7). 4. White-coloured handle; வெள்ளிய கைப்பிடி. *வெணகை யொளவாள்* (பெரும்பாண். 71).

வெண்கொடி veṇ-koṭi, *n.* <id.+. 1. Flag of victory; வெற்றிக்கொடி. *விசய வெண கொடி* (புறநா. 362). 2. Sarasvatī; சரசுவதி. (பெரியபு. தடுத்தாட். 97.)

வெண்கொடிவேலி veṇ-koṭivēli, *n.* <id.+. A species of Ceylon lead-wort; கொடுவேலிவகை. (சங். அக.)

வெண்கொல் veṇ-kol, *n.* <id.+கொல்[2]. Silver, as the white metal; வெள்ளி. (இலக். அக.)

வெண்கொற்றக்குடை veṇ-koṟṟa-k-kuṭai, *n.* <id.+கொற்றம்+. White umbrella of victory, one of the insignia of royalty; அரசனது வெற்றி குறிக்கும் வெண்ணிறக்குடை. (சிலப. 5, 173, உரை.)

வெண்கோட்டம் veṇ-kōṭṭam, *n.* <id.+. கோட்டம்[3]. 1. A fragrant substance, one of 32 *ōmālikai*, q.v.; ஓமாலிகை முப்பத்திரண்டனு ளொன்றான நறும்பண்டம். (சிலப. 4, 77, உரை.) 2. See வெண்கோஷ்டம். *பால்வெணகோட்டமும்* (பெருங். உஞ்சைக். 50, 29).

வெண்கோடல் veṇ-kōṭal, *n.* <id.+ கோடல்[3]. See வெண்காந்தள். *வெணகோட லிலைச்சுருளில்* (பெரியபு. ஆறுமு. 16).

வெண்கோஷ்டம் veṇ-kōṣṭam, *n.* <id.+ கோஷ்டம்[1]. 1. Arabian costum, m. sh., *Costus speciosus*; செடிவகை. 2. Pellitory root. See அக்கராகாரம். (மலை.)

வெல்புகழ் vel-pukaḻ, n. < வெல்- +. Fame due to victory in war; போர்க்கண் வெற்றி யாலுண்டாங் கீர்த்தி. பாடினர் வெல்புகழைப் பல்புல வர் (பு. வெ. 8, 1).

வெல்லச்சீடை vella-c-cīṭai, n. < வெல்லம் +. Ball-cake of rice-flour made with coarse cane-sugar; அரிசிமாவும் வெல்லமுஞ் சேர்த்துச் செய்த சீடைப்பணியாரம்.

வெல்லடி vellaṭi, n. A kind of net; வலை வகை. Madr.

வெல்லப்பாகு vella-p-pāku, n. < வெல்லம் + பாகு[1]. Treacle; கருப்பஞ்சாற்றைக் காய்ச்சி யுண்டாக்குங் குழம்பு.

வெல்லம் vellam, n. [T. bellamu, K. bella, M. vellam.] Jaggery, unrefined cane-sugar; கருப்பஞ்சாற்றுக் கட்டி. வெல்லச்சொ ருவலர்க்கு (தனிப்பா. i, 305, 1).

வெல்லல் vellal, n. perh. வெல்-. Small elliptic cuspidate-leaved windberry. See வாயு விளங்கம், 1. (L.)

வெல்லவட்டு vella-vaṭṭu, n. < வெல்லம் + வட்டு. Circular piece of jaggery; வெல்லத்தைக் காய்ச்சிச் சக்கரமாக ஊற்றிய துண்டு. வெல்லவட்டுப் போல் வார்த்தை சொல்லி (கவிகுஞ். 10).

வெல்லவல் vellaval, n. < id. + அவல். A sweet preparation of aval or parched rice; வெல்லஞ் சேர்த்துத் தயாரித்த அவல்.

வெல்லி[1] velli, n. cf. bālā. A species of cardamom. See சிற்றேலம். (மலை.)

வெல்லி[2] velli, *n.* prob. வெல்-. Clever woman; சமர்த்தி. *Nāñ.*

வெல்லுமா vellu-mā, *n.* <id.+மா[2]. Tiger; புலி. (W.)

வெல்லை vellai, *n.* <வெள்ளை. [T. *vella.*] Whiteness; வெள்ளைநிறம். வெல்லை யறுவை நீக்கி (சிவதரு. சிவஞானதான. 36).

வெல்வெட்டு velvettu, *n.* <E. Velvet; பளபளப்புள்ள துணிவகை.

வெலத்தி velatti, *n.* See வேலித்தி, 2. *Loc.*

வெலவெல-த்தல் velavela-, 11 *v. intr.* cf. *bil.* 1. To be faint with fatigue; களைத்தல். பசியால் வெலவெலத்துப்போனான். 2. To quake, tremble, as one's limbs; கைகால் உதறுதல். குளிரால் கைகால்கள் வெலவெலக்கின்றன. 3. To be dazed, astonished; பிரமித்தல். அவன்பேச்சைக் கேட்டு வெலவெலத்துப்போனான்.

வெலி[1] veli, *n.* perh. வெளி[1]. [T. *veli.*] 1. Banishment, excommunication; புறம்பாக்குகை. (W.) 2. Expunging; எழுத்தினின்றும் தவறான பகுதியை விலக்குகை. *Loc.*

வெலி[2] veli, *n.* Corr. of பலி[3]. See பலி[3], 1, 2. *Nāñ.*

வெலிகம் velikam, *n.* Aloe. See கற்றாழை, 1. (மலை.)

வெலிகாரம் velikāram, *n.* <வெண்காரம். [K. *biligāra.*] Borax. See வெண்காரம். (யாழ். அக.)

வெலிசாத்து veli-cāttu, *n.* <Fr. *bailli*+சாத்து. Warrant, as of arrest or attachment; ஆளைப்பிடிக்கவேனும் சொத்தைக் கட்டுப்படுத்தவேனும் இடுங் கட்டளை. வெலிசாத்து விட்டு வீட்டைத் தடைபடுத்தி யிருக்கிறேன்.

வெலித்தி velitti, *n.* <T. *veliti.* (W.) 1. Anything thin; lean person; ஒல்லி. 2. Being lose in texture; ஆடை முதலியன கடுத்தமின்றியிருக்கை. 3. (Mus.) See வெள்ளோசை, 1, 2. *Loc.*

வெலீஇயோன் velīiyōṉ, *n.* <வெல்-. One who caused victory; வெல்வித்தோன். நிற்கூறும்மே வெலீஇயோ னிவனென (புறநா. 125).

வெவ்வர் vevvar, *n.* <வெம்-மை. Heat; வெம்மை. வெவ்வரோச்சம் பெருக (பதிற்றுப். 41, 20).

வெவ்விடாய் vev-viṭāy, *n.* <id.+. Intense thirst; கடுந் தாகம். வெவ்விடாய் தணிவுற (பாரத. நாலாம்போர். 46).

வெவ்விது vevvitu, *n.* <id. 1. That which is hot; சூடானது. 2. That which is harsh, cruel or severe; கொடியது. சினமிக்கு வெவ்விதா யெழுந்து (கலித். 102, 20, உரை).

வெவ்வினை vev-viṉai, *n.* <id.+. 1. Relentless karma; கொடியவினை. 2. Battle; போர். (யாழ். அக.)

வெவ்வுயிர்-த்தல் vev-v-uyir-, *v. intr.* <id.+உயிர்-. See வெய்துயிர்-. உள்ளமலங்க வெவ்வுயிர்க்கும் (திவ். திருவாய். 2, 4, 4).

வெவ்வுயிர்க்கொள்(ளு)-தல் vevvuyir-k-koḷ-, *v. intr.* <வெவ்வுயிர்-+. See வெய்துயிர்-. வெவ்வுயிர்க்கொண்டு (திவ். திருவாய். 10, 3, 3).

வெவ்வுரை vev-v-urai, *n.* <வெம்-மை+உரை[6]. Severe, harsh language; கடுஞ்சொல். வெவ்வுரை யெங்கட்கு விளம்பினிர் (மணி. 25, 53).

வெவ்வுழவு vev-v-uḻavu, *n.* <வெறு-மை+. Superficial ploughing; மேலுழவு. (J.)

வெவ்வெஞ்செல்வன் vev-veñ-celvaṉ, *n.* <வெம்-மை+வெம்-மை+. The rising sun, as one whose warmth is welcome or pleasing; வெம்மையுடையதும் விரும்பப்படுவதுமாகிய இளஞாயிறு. வெவ்வெஞ்செல்வன் விசும்பு படர்ந்தாங்கு (பொருந. 136).

வெவ்வேகம் ve-v-vēkam, *n.* <id.+. Virulent poison; கொடிய நஞ்சு. வெவ்வேகங் கொதித் தெழுந்து (திருக்காளத். பு. காளன். 7).

வெவ்வேறாக vevvēṟāka, *adv.* <வெவ்வேறு+. Separately; distinctly; தனித்தனியாக. மூவரையும் வெவ்வேறாக நினையாத (கலித். 9, உரை).

வெவ்வேறு vevvēṟu, *n.* <வேறு+வேறு. [T. *vevvēru*, M. *vevvērē.*] Separateness; தனித்தனி,

வெவிச்சைக்கெண்டை veviccai-k-keṇṭai, *n.* cf. வெளிச்சைக்கெண்டை. Carp, silvery, attaining 6 in. in length, *Chela argentea;* வெண்மை நிறமுடையதும் ஆறங்குலம் வளர்வதுமான மீன்வகை.

வெழுமூட்டு-தல் veḻumūṭṭu-, *v. tr.* Caus. of வெழுமூள்-. cf. வழுமூட்டு-. 1. To smooth; to polish; வழுவழுப்பாக்குதல். தீற்றிய சுண்ணும்பை வெழுமூட்டு. 2. To smooth over, as a fault; to whitewash; குற்றமறைத்துப் பேசுதல்.—*intr.* To be excoriated, wear off. See வழுந்து-.

வெழுமூண்டகாயம் veḻumūṇṭa-kāyam, *n.* <வெழுமூள்-+காயம்[2]. Abrasion; தோலுரிந்த புண்.

வெழுமூள்(ளு)-தல் veḻu-mūḷ-, *v. intr.* prob. வழு+மூள்-. 1. To be covered with

skin; தோல் மூடுதல். 2. To be smooth or soft; வழுவழுப்பாதல். 3. To be silent; மௌனமாயிருத்தல். 4. See வெழுமுட்டு-.

வெழுமெனல் veḻum-eṉal, n. Expr. of being smooth to the touch; வழுவழுப்புக் குறிப்பு.

வெள்[1] veḷ, adj. < வெண்-மை. [K. bil] 1. White; வெண்மையான. வெள்ளரைக் கொளீஇ (மலைபடு. 562). 2. Blank; empty; உள்ளீடற்ற. 3. Pure, unadulterated; கலப்பில்லாத. 4. Shining, bright; ஒளிபொருந்திய. வெள்வேல் விடலை (அகநா. 7).

வெள்[2] veḷ, n. < வள்[2]. Sharpness; கூர்மை. (நாமதீப. 427.)

வெள்கு-தல் veḷku-, 5 v. intr. [K. beḷku.] 1. To be ashamed; வெட்குதல். வெள்கிட மகுடஞ் சாய்க்கும் (கம்பரா. வாலிவதை. 73). 2. To be coy, bashful; கூச்சப்படுதல். தான்றன் வென்றியை புரைபட வெள்க (கம்பரா. திருவடி. 9). 3. To fear; அஞ்சுதல். வெந்தனகள் கொணடெறிய வெள்கிம் மயிரக் கவரிமா விரியுமே (சீவக. 1897). 4. To shudder; to be perplexed; மனங்கலங்குதல். (பிங.)

வெள்யாடு veḷ-yāṭu, n. < வெள்[1] +. See வெள்ளாடு. (தொல். சொல். 17, உரை.)

வெள்வங்கம் veḷ-vaṅkam, n. prob. id. + வங்கம்[1]. A kind of medicine; மருந்துவகை. (இராசவைத். 102, உரை.)

வெள்வரகு veḷ-varaku, n. < id. +. A species of millet; வரகுவகை. வெள்வரகுழுத கொள்ளுடைக் கரம்பை (பதிற்றுப். 75, 11).

வெள்வரி veḷ-vari, n. < id. + வரி[1]. 1. Cowry; பலகறை. (மூ. அ.) 2. Streak in the white of the eye, an eye-disease; கண்ணோய் வகை. (சீவரட். 267.) 3. See வெள்ளரி. (சிலப். 16, 25, அரும்.)

வெள்வரை-த்தல் veḷ-varai-, v. intr. prob. id. +. To dawn; கிழக்குவெளுத்தல். வெள் வரைப்பதன் முன்னந் துறைபடிந்து (திவ். நாய்ச். 1, 2).

வெள்வரைப்பு veḷvaraippu, n. < வெள் வரை-. Break of dawn; கிழக்குவெளுக்கை. வெள் வரைப் பின் முன்னெழுந்து (திவ். பெரியாழ். 3, 8, 9).

வெள்வவ்வால் veḷ-vavvāl, n. < வெள்[1] +. Silver pomfret, greyish neutral tint with purplish reflections, attaining 1 ft. in length, *Stromateus cinereus;* சாம்பல்நிறமுள்ளதும் ஓரடி வளர்வதுமான வவ்வால்மீன்வகை. (பதார்த்த. 936.)

வெள்வளையார் veḷ-vaḷaiyār, n. < id. + வளை[3]. Women, as wearing white conch-bracelets; மகளிர். வெம்முரண வேந்தரும் வெள் வளையார் தோள் விழைந்து (பு. வெ. 9, 24).

வெள்வாகை veḷ-vākai, n. < id. +. White siris, l. tr., *Albizzia procera;* வாகைமர வகை. (L.)

வெள்வாடை veḷ-vāṭai, n. < id. + வாடை[1]. Gentle breeze; இளந்தென்றல். (யாழ். அக.)

வெள்வாள் veḷ-vāḷ, n. < id. + வாள்[1]. Shining sword; ஒளியுள்ள வாள். வெள்வாள் வேந்தன் (பு. வெ. 8, 27, கொளு).

வெள்விழி veḷ-viḻi, n. < id. +. White of the eye; வெள்ளைவிழி. (சீவரட். 265.)

வெள்விளர்-த்தல் veḷ-viḷar-, 11 v. intr. Redupl. of விளர்-. See வெள்ளவிளர்-. (தொல். எழுத். 482, உரை.)

வெள்விளா veḷ-viḷā, n. < வெள்[1] + விளா[1]. Ben teak. See வெண்டேக்கு. (L.)

வெள்வீச்சு veḷ-vīccu, n. < id. +. Empty boast; ஆடம்பரப்பேச்சு. *Tinn.*

வெள்வெங்காயம் veḷ-veṅkāyam, n. < id. +. 1. Onion. See வெங்காயம். 2. Garlic. See வெள்ளைப்பூண்டு. (சங். அக.)

வெள்வெட்சி veḷ-veṭci, n. < id. +. 1. Common bottle flower. See பாவட்டை, 2. (M. M. 901.) 2. See வெட்சி. (W.)

வெள்வெட்டிவேர் veḷ-veṭṭivēr, n. < id. +. Cuscus-grass. See இலாமிச்சை. (சங். அக.)

வெள்வெடி veḷ-veṭi, n. < id. + வெடி[2]. 1. Blank cartridge; குண்டு இல்லாத தோட்டா. (W.) 2. See வெள்வீச்சு. *Loc.* 3. See வெள்ளடி[3].

வெள்வேங்கை veḷ-vēṅkai, n. < id. +. Siris, l. tr., *Albizzia lebbek;* வேங்கைமரவகை.

வெள்வேம்பு veḷ-vēmpu, n. < id. +. A kind of margosa; வேப்பமரவகை. (பரி. அக.)

வெள்வேல் veḷ-vēl, n. < id. + வேல்[2]. (L.) 1. Tamarind-like cutch. See பேய்க்கருங்காலி. 2. Panicled babool, m. tr., *Acacia leucophloea;* வேல்வகை.

வெள்வேலம் veḷvēlam, n. See வெள் வேல், 2. (L.)

வெள்வேலன்[1] veḷvēlaṉ, n. < வெள் வேலம். See வெள்வேல், 2.

வெள்வேலன்[2] veḷ-vēlaṉ, n. < வெள்[1] + வேல்[1]. Warrior armed with a bright spear; ஒள்ளிய வேல்தாங்கிய வீரன். (W.)

வெள்வேலா vēlvēlā, *n.* <வெள்வேல். See வெள்வேல், 2. (L.)

வெள்வேலோன் veḷ-vēlōṉ, *n.* <வெள்[1] + வேல்[1]. See வெள்வேலன்[2]. (W.)

வெள்ளக்காடு veḷḷa-k-kāṭu, *n.* <வெள்ளம் + காடு[1]. 1. Inundation by flood; நீரால் நிலப் பரப்பு நிறைகை. புழைக்கடையெல்லாம் வெள்ளக் காடாயவிட்டது. 2. Excessive flood; பெரு வெள்ளம்.

வெள்ளக்கால் veḷḷa-k-kāl, *n.* <id. + கால்[1]. Flood; வெள்ளநீர். கழனியை வெள்ளக்கால் வந்து கோதத்தென (பரிபா. 7, 33, உரை).

வெள்ளக்குடி veḷḷa-k-kuṭi, *n.* <id. + குடி[2]. Drink; பானம். இன்று அமாவாசையானதால இர வில் கொஞ்சம வெள்ளக்குடி இருக்கட்டும். *Nāñ.*

வெள்ளக்கேடு veḷḷa-k-kēṭu, *n.* <id. +. See வெள்ளப்பாழ். வெள்ளக்கேடும வறட்கேடு மின்றிக்கே (திவ். திருப்பா. 3, வ்யா.).

வெள்ளகத்தி veḷ-ḷ-akatti, *n.* <வெள்[1] +. West Indian pea-tree, s. tr., *Sesbania grandiflora;* அகத்திவகை. (மூ. அ.)

வெள்ளங்காட்டி veḷḷaṉ-kāṭṭi, *adv.* prob. வெள்ளெனல் + காட்டு-. Early in the morning; விடியற்காலையில். *Loc.*

வெள்ளச்சாவி veḷḷa-c-cāvi, *n.* <வெள்ளம + சாவி[1]. See வெள்ளப்பாழ். (Insc. Pudu. 343.)

வெள்ளச்சேதம் veḷḷa-c-cētam, *n.* <id. +. See வெள்ளப்பாழ். (W.)

வெள்ளடம்பு veḷ-ḷ-aṭampu, *n.* <வெள்[1] +. Moon-flower, m. cl., *Calonyction grandiflorum;* கொடிவகை.

வெள்ளடி[1] veḷ-ḷ-aṭi, *n.* <id. + அடு-. [T. *velladi.*] 1. Openness; வெளிப்படை. (W.) 2. Publicity; பகிரங்கம். *Loc.* 3. Emptiness; உள்ளீடின்மை. (W.) 4. Simplicity; சாதாரணம். (W.) 5. Anything simple, plain or commonplace; சாதாரணமானது.

வெள்ளடி[2] veḷ-ḷ-aṭi, *n.* <id. + அடி[3]. 1. Bare foot, uncovered foot; வெறுங்கால். 2. (Pros.) Metrical line pertaining to *veṇpā;* வெண்பாவுக்குரிய அடி. (யாப். வி. 85, உரை.)

வெள்ளடி[3] veḷ-ḷ-aṭi, *n.* <id. + அடி[2]. Intimidation; வெருட்டு. (யாழ். அக.)

வெள்ளடிச்சேவல் veḷ-ḷ-aṭi-c-cēval, *n.* <id. + அடி[3] + சேவல்[1]. Fighting cock with spurs uncut; காலின்முட் சேதுக்கப்படாத சண்டைச் சேவல். (W.)

வெள்ளடிவெருட்டு veḷḷaṭi-veruṭṭu, *n.* <வெள்ளடி[1] +. See வெள்விச்சு. *Loc.*

வெள்ளடை[1] veḷ-ḷ-aṭai, *n.* <வெள்[1] +. Betel; வெற்றிலை. வெள்ளடைத் தம்பல் (கமபரா. காரகாண. 29).

வெள்ளடை[2] veḷḷaṭai, *n.* prob. வெள ளிடை. 1. The great cosmic space; பரமாகாசம். வேதனை தீர்தரு வெள்ளடை (திருமந். 1157). 2. The Śiva shrine at Tiru-k-kurukāvūr; திருக்குருகாவூரி லுள்ள சிவன் கோயில். விளங்கொளி குருகாவூர் வெள்ளடை யுறைவானே (தேவா. 61, 10).

வெள்ளணங்காட்டி veḷḷaṇankāṭṭi, *adv.* See வெள்ளங்காட்டி. *Vul.*

வெள்ளணி veḷ-ḷ-aṇi, *n.* <வெள்[1] + அணி[2]. 1. White dress worn by a maid to signify to her lord that her lady is delivered of a son; தலைவிக்கு மகன் பிறந்த செய்தியைத் தலைமகன் அறிந்துகொள்ளும்பொருட்டு தோழி யணிந்துகொள் ளும் வெண்மைநிறமுள்ள ஆடை முதலியன. (தஞ்சை வா. 388, தலைப்பு) 2. Decorative dress of the king on his birthday; அரசன் பிறந்தநாளொப்பனை. (சீவக. 614, உரை.) 3. Festival celebrating the king's birthday; அரசன் பிறந்தநாள் விழா. அடித் தளை நீக்கும வெள்ளணியாம் (சிலப. 27, 229).

வெள்ளப்பாடு veḷḷa-p-pāṭu, *n.* <வெள்ளம் +. 1. See வெள்ளப்பாழ். 2. Low-lying fields; பள்ளமான வயனிலம். வெள்ளப்பாடான கிராமம.

வெள்ளப்பாழ் veḷḷa-p-pāḻ, *n.* <id. +. Injury to crops by flood, one of *mu-p-pāḻ,* q.v.; வெள்ளமிகுதியால் நேரும் பயிர்க்கேடு.

வெள்ளம் veḷḷam, *n.* prob. வெண்-மை. [T. *velli,* K. *bella,* M. Tu. *veḷḷam.*] 1. Flood; deluge; நீர்ப்பெருக்கு. (பிங்.) வெள்ளநதாழ் விரிசடை யாய (திருவாச. 3, 1). 2. Sea; கடல். (பிங்.) மகர வெள்ளத் திறுததநால (கம்பரா. கடல்காண. 2). 3. Sea-wave; கடலலை. (பிங்.) 4. Water; நீர். குடிக்க வெள்ளங் கொணடுவா. *Nāñ.* 5. Moisture; ஈரம். (பிங்.) 6. Abundance; மிகுதி. (சூடா.) 7. A large number; ஒரு பேரெண். (பிங்.) (தொல். எழுத. 393.) 8. Truth; உண்மை. இது கள்ளமா வெள்ளமா ? (W.)

வெள்ளம்போடு-தல் veḷḷam-pōṭu-, *v. intr.* <வெள்ளம் +. 1. See வெள்ளமெடு-. (J.) 2. To drink liquor; கட்குடித்தல். *Loc.*

வெள்ளமெடு-த்தல் veḷḷam-eṭu-, *v. intr.* <id. +. 1. To be deluged, inundated; நீர்பரவு தல். (W.) 2. To be in floods; பெருக்கெடுத்தல்.

வெள்ளர் veḷḷar, *n.* <வெள்[1]. 1. White men; வெண்ணிறமுடையார். 2. True, honest

men; கபடமற்றவர். கள்ளரோ புகுந்தீரென்ன . . . வெள்ளரோ மென்று நின்ருா (தேவா. 1190, 9).

வெள்ளரசு veḷ-ḷ-aracu, n. <id. + அரசு[1]. A kind of pipal tree; அரசமரவகை. (சங. அக.)

வெள்ளரணை veḷ-ḷ-aranai, n. <id. +. Lice in clothes. See சீலைப்பேன். (சங. அக.)

வெள்ளரா veḷ-ḷ-arā, n. prob. id. +. Seer fish. See மாப்பிலாச்சை. (M. M. 803.)

வெள்ளராமுள்ளி veḷḷarā-muḷḷi, n. <வெள்ளரா + முள். A fish-hook for catching seer-fish; வெள்ளராமீனைப் பிடிக்கவுதவுந் தூண்டில் வகை. *Loc.*

வெள்ளரி veḷ-ḷ-ari, n. <வெள்[1] + அரி[5]. [M. *veḷḷari.*] 1. Cucumber, *Cucumis sativus;* கொடிவகை. (பிங.) 2. Mottled-melon, *Cucumis memordica;* கொடிவகை. பிட்டு வெள்ளரிப்பழம் (திருப்பு. விநாயகாதுதி. 3). 3. Kakri-melon. See கக்கரி. *Madr.*

வெள்ளரிகெரவிநெல் veḷ-ḷ-arikeravi-nel, n. <id. + அரிக்கிராவி +. A kind of paddy; நெல்வகை. (A.)

வெள்ளரிசி veḷ-ḷ-arici, n. <id. +. Grains of rice used in benediction. See அச்சதம்[1]. (திவா.)

வெள்ளரிஞ்சகெண்டை veḷḷariñca-keṇṭai, n. <id. + perh. வரி[2]- + கெண்டை[1]. Carp, orange, attaining 1 ft. in length, *Labeo boga;* மஞ்சள் நிறமுள்ளதும் ஓரடி வளர்வதுமான ஆற்றுமீன் வகை.

வெள்ளரிப்பழம் veḷḷari-p-paḻam, n. <வெள்ளரி +. 1. A person of delicate health; எளிதில் நோயுறும் தன்மையுள்ளவன். பிள்ளை வெள்ளரிப்பழந்தான். 2. Person of sound health, as fresh and plump as a ripe cucumber; நோயற்றவன்.

வெள்ளல்லி veḷ-ḷ-alli, n. <வெள்[1] +. See வெள்ளாம்பல், 1. (பிங.)

வெள்ளலரி veḷ-ḷ-alari, n. <id. +. Linear-leaved oleander, l. sh., *Nerium odorum-alba;* அலரிவகை. (W.)

வெள்ளலோத்தம் veḷḷalōttam, n. See வெள்ளிலோத்திரம், 1. (திருவிளை. மாணிக்கம்விற்ற. 39.)

வெள்ளவரை veḷ-ḷ-avarai, n. <வெள்[1] +. Country bean, *Dolichos lablab;* அவரைவகை. (மூ. அ.)

வெள்ளவாசி veḷḷa-vāci, n. prob. விலை வாசி. Rate of assessment according to the market-price of grain; அகவிலையின்படி விதிக்கப்படுந் தீர்வை. (W. G.)

வெள்ளவாரி veḷḷavāri, n. <வெள்ளம் + வாரி[1]-. 1. Feeder channel; வரத்து வாய்க்கால். *Loc.* 2. Channel to drain off flood-water; வெள்ளநீர் வடியும் வடிகால்.

வெள்ளவிளர்-த்தல் veḷḷa-viḷar-, 11 v. intr. Redupl. of விளர்-. To become very white, as a washed cloth; மிகவெண்மையாதல். ஆடை வெள்ளவிளர்த்தது (தொல். எழுத். 482, உரை).

வெள்ளவெளி veḷḷa-veḷi, n. Redupl. of வெளி[1]. The great cosmic space. See பரவெளி, 1. கலந்திடில் வெள்ளவெளியாம் (திருவுந்தியார், 23).

வெள்ளழுகல் veḷ-ḷ-aḻukal, n. <வெள்[1] +. That which has become putrid and moss-grown; பூஞ்சைக்காளான் பிடித்த தழுகியது. (யாழ். அக.)

வெள்ளறிவு veḷ-ḷ-aṟivu, n. <id. +. [K. *bellaṟivu.*] Want of judgement; silliness, senselessness; அவிவேகம். விலங்கன்ன வெள்ளறிவினா (நாலடி, 375).

வெள்ளறுகு veḷ-ḷ-aṟuku, n. <id. +. 1. White Bermuda grass, *Cynodon;* அறுகம்புல் வகை. (மலை.) 2. Small chiretta, *Exacum hyssopifolia;* புல்வகை. (W.)

வெள்ளறுவை veḷ-ḷ-aṟuvai, n. <id. +. [K. *bellaṟive.*] White cloth; வெள்ளைவஸ்திரம். தூவெள்ளறுவை (புறநா. 286).

வெள்ளாங்குடி veḷḷāṅ-kuṭi, n. <வெள்ளான் + குடி[4]. Part of a village where Vēḷāḷas live; வேளாளர் வசிக்கும் ஊர்ப்பகுதி. *Loc.*

வெள்ளாங்குருகு veḷḷāṅ-kuruku, n. <வெள்[1] + ஆ[6]- +. A species of white crane; வெண்ணாரைவகை. வெள்ளாங்குருகின் பிள்ளைசெத்தென (ஐங்குறு. 151).

வெள்ளாஞ்செட்டி veḷḷāñ-ceṭṭi, n. <வெள்ளான் + செட்டி[1]. Person belonging to a class of Vēḷāḷas who trade; வேளாளருள் வியாபாரஞ் செய்யும் பிரிவினன். (W.)

வெள்ளாட்டி veḷ-ḷ-āṭṭi, n. perh. வெள்[1] +. [T. *veḷḷāṭakatte*, M. *veḷḷaṭṭi.*] 1. Maid-servant; பணிப்பெண். ஒரு வெள்ளாட்டியையும் சம்பாதித்து (ஈடு, 4, 1, 7). சட்டர் வெள்ளாட்டிகளை மடத்தில் வைத்துக்கொள்ளப் பெருர் (T. A. S. i, 9). 2. Concubine; வைப்பாட்டி. *Loc.*

வெள்ளாட்டிச்சி veḷḷāṭicci, n. Fem. of வெள்ளாளன். See வெள்ளாளச்சி. (இலக். வி. 178, உரை.)

வெள்ளாடு vel-l-āṭu, n. <வெள்[1]+. Goat; ஆடுவகை. (நன். 266, உரை.) மனிதர் காராட்டை வெள்ளாடென்ப தொக்குமால் (பிரபுலிங். பிரபுதேவா வந்த. 59).

வெள்ளாண்செட்டி veḷḷāṇ-ceṭṭi, n. <வெள்ளாளன்+செட்டி[1]. See வேள்ளாஞ்செட்டி.

வெள்ளாண்பிள்ளை veḷḷāṇ-piḷḷai, n. <id.+. 1. Vēḷāḷa boy; வேளாளச் சிறுவன். (தொல். எழுத். 338.) 2. See வேளாளன். (W.)

வெள்ளாண்மரபு veḷḷāṇ-marapu, n. <id. +. The Vēḷāḷa caste; வேளாள சாதி. வெள் ளாணமரபுக்கு வேதமெனு (நாலடி, தனிப்பா.).

வெள்ளாண்மை veḷḷāṇmai, n. prob. id. Cultivation; வேளாண்மை. (M. M. 969.)

வெள்ளாண்வாழ்க்கை veḷḷāṇ-vāḻkkai, n. <வெள்ளாண்மை+. Calling of a Vēḷāḷa; வேளாளனது சீவனம்.

வெள்ளாத்திபோளம் vel-l-ātti-pōḷam, n. <வெள்[1]+perh. ஆத்தி[1]+போளம்[1]. White myrrh. See வெள்ளைப்போளம். (இங். வை.)

வெள்ளாந்தை veḷḷāntai, n. cf. வெண ணுநதை. A species of rock snake; மலைப்பாம்பு வகை. (W.)

வெள்ளாப்பு vel-l-āppu, n. <வெள்[1]+ ஆப்பு[3]. White awning or canopy; வெள்ளைமேற் கட்டி. Loc.

வெள்ளாம்பல் vel-l-āmpal, n. <id.+. 1. White Indian water-lily. See வெண்ணெய்தல். (பிங்.) 2. Esculent white water-lily, *Nymphaea edulis;* நீர்க்கொடிவகை. அளியதாமே சிறுவெள்ளாம் பல் (புறநா. 248).

வெள்ளாம்பிள்ளை veḷḷām-piḷḷai, n. <வெள்ளாள்+. See வெள்ளாண்பிள்ளை, 1. (W.)

வெள்ளாமணக்கு vel-l-āmaṇakku, n. <வெள்[1]+. Common physic nut. See காட் டாமணக்கு, 1. (பதார்த்த. 530.)

வெள்ளாமை[1] veḷḷāmai, n. <வேளாண்மை. Cultivation. See வேளாண்மை. (C. G.)

வெள்ளாமை[2] vel-l-āmai, n. <வெள்[1]+. (W.) 1. White sea turtle; கடலாமைவகை. 2. A fresh-water tortoise. See பறையாமை.

வெள்ளாரல் vel-l-āral, n. <id.+ஆரல்[1]. A kind of fish; மீன்வகை. தருவெள்ளாரல் தும் மையன் (பருளை. பள்ளு. 16).

வெள்ளால் vel-l-āl, n. <id.+ஆல்[1]. Java fig, l. tr., *Ficus benjamina;* நீண்டமரவகை. (L.)

வெள்ளாவி vel-l-āvi, n. <id.+ஆவி[2]. Steam used for bleaching clothes; ஆடையை வெளுக்க உதவும் நீராவி.

வெள்ளாவிகட்டு-தல் vellāvi-kaṭṭu-, v. tr. <வெள்ளாவி+. To treat clothes with steam, in bleaching; வெளுத்தற்குரிய ஆடைகளை நீராவியி லிடுதல்.

வெள்ளாவிரை vel-l-āvirai, n. <வெள்[1]+. Glaucous-leaved eglandular senna, s. tr., *Cassia glauca;* சிறுமரவகை.

வெள்ளாவிவை-த்தல் vellāvi-vai-, v. tr. <வெள்ளாவி+. 1. See வெள்ளாவிகட்டு-. (W.) 2. To beat severely; நன்றாக அடித்தல். பயலை நன்றாக வெள்ளாவிவைத் தனுப்பிவிட்டான். *Nāñ.*

வெள்ளாழச்சி veḷḷāḻacci, n. Fem. of வெள்ளாழன். See வெள்ளாளச்சி. (W.)

வெள்ளாழன் veḷḷāḻaṉ, n. See வெள் ளாளன். (W.)

வெள்ளாளச்சி veḷḷāḷacci, n. Fem. of வெள்ளாளன். Vēḷāḷa woman; வேளாளசாதிப் பெண்.

வெள்ளாளன் veḷḷāḷaṉ, n. Corr. of வேளா ளன். [M. *veḷḷāḷan.*] Man of the Vēḷāḷa caste; வேளாளமரபினன். (தொல். எழுத். 338, உரை.)

வெள்ளாறு vel-l-āṟu, n. <வெள்[1]+ஆறு[1]. A river that flows through the Pudukkottah State, forming the traditional boundary between the Cōḷa and the Pāṇḍya kingdoms; புதுக் கோட்டைச் சீமையில் உள்ளதும் சோழபாண்டிய நாடு களுக்கு இடையெல்லையானதுமான ஒரு நதி. வெள ளாறது வடக்காம (தனிப்பா. 1, 126, 2).

வெள்ளான் veḷḷāṉ, n. See வெள்ளாளன். வெள்ளான் நத்தங்கள் (S. I. I. ii, 114).

வெள்ளான்குடி veḷḷāṉ-kuṭi, n. <வெள் ளான்+குடி[4]. See வெள்ளாங்குடி.

வெள்ளான்செட்டி veḷḷāṉ-ceṭṭi, n. <id.+செட்டி[1]. See வெள்ளாஞ்செட்டி. (W.)

வெள்ளான்வகை veḷḷāṉ-vakai, n. <id. +. That which belongs to the Vēḷāḷa class, as lands in a village; வேளாளர்க்குரிய கிராமப்பங்கு முதலியன. வெள்ளான்வகையாய் வருகின்ற நிலம் (S. I. I. ii, 54).

வெள்ளானை vel-l-āṉai, n. <வெள்[1]+. 1. [K. *bellāne.*] Indra's elephant; இந்திரனது யானை. வெள்ளானைச்சருக்கம. (பெரியபு.) 2. White elephant; வெள்ளையானை. 3. Sublimate of mercury; வாலைரசம். (மூ. அ.)

வெள்ளானையுள்ளோன் vellāṉai-y-uḷḷōṉ, n. < வெள்ளானை + உள்[1]. Aiyaṉār; ஐயனார். (நாமதீப. 43.)

வெள்ளானையூர்ந்தோன் vellāṉai-y-ūrntōṉ, n. < id. + ஊர்[1]-. Indra; இந்திரன். (நாமதீப. 60.)

வெள்ளானைவாழை vellāṉai-vāḻai, n. prob. id. +. A kind of plantain; வாழைவகை. (Insc. Pudu. 929.)

வெள்ளி[1] veḷḷi, n. < வெண்-மை. [T. vendi, K. beḷḷi, M. veḷḷi.] 1. Whiteness; வெண்மை. வெள்ளி நோன்படை (புறநா. 41). 2. Silver, *Argentum*; வெண்ணிறமுள்ள லோகவகை. (பிங்.) விண்ணகு வெள்ளி வெற்பின் (சீவக. 1646). 3. A silver coin; வெள்ளிநாணயவகை. 4. Star; நட்சத்திரம். வானத்திலுள்ள வெள்ளியைக் கணக்கிட முடியுமா? 5. The planet Venus; சுக்கிரனென்னுங் கோள். இலங்கு கதிர் வெள்ளி தென்புலம் படரினும் (புறநா. 35). 6. Śukra, the priest of the Asuras; அசுரகுருவாகிய சுக்கிரன். 7. Friday; வெள்ளிக்கிழமை. வெள்ளி வாரத்து (சிலப. 23, 135). 8. An ascetic of Dharmapuram mutt who is said to have made interpolations in many poems, such as Kampa-rāmāyaṇam, Periya-purāṇam, etc.; தருமபுரவாதீனத்துத் தம்பிரான்களிலொருவரும் கம்பராமாயணம் பெரியபுராண முதலிய முன்னூல்களில் தம்கவிகளை இடைச்சேருகியவராகச் சொல்லப்படுபவருமாகிய ஒரு புலவர். இது வெள்ளி பாடல். 9. Ignorance; அறிவின்மை. வெள்ளியை யாதல் விளம்பினை (கம்பரா. வேள்வி. 29). 10. Semen virile; விந்து. வெள்ளி யுருகியே பொன்வழி யோடாமே (திருமந். 834).

வெள்ளி[2] veḷḷi, n. Corr. of வள்ளி[2].

வெள்ளிக்கரு veḷḷi-k-karu, n. prob. வெள்ளி[1] + கரு[3]. A kind of covering for drugs, used in sublimating them; மருந்துப்புடம் வைப்பதன்முன் அதனை மூடும் மூடிவகையி லொன்று. (மூ. அ.)

வெள்ளிக்கலியாணம் veḷḷi-k-kaliyāṇam, n. < id. +. Silver wedding; தம்பதிகள் மணந்து இருபத்தைந்தாண்டு முடிந்தவன்று நிகழ்த்துங் கொண்டாட்டம். *Chr.*

வெள்ளிக்காசு veḷḷi-k-kācu, n. < id. + காசு[3]. 1. Silver coin; வெள்ளி நாணயம். 2. A kind of fish; ஒருவகை மீன். (சங். அக.)

வெள்ளிக்காரம் veḷḷi-k-kāram, n. < id. + காரம்[1]. Nitrate of silver. See காடிக்காரம். *Loc.*

வெள்ளிக்காறு veḷḷi-k-kāṟu, n. < id. +. Bar of silver, silver bullion; உருக்கிவார்த்த வெள்ளிக்கட்டி. (W.)

வெள்ளிக்கிழங்கு veḷḷi-k-kiḻaṅku, n. < வெள்ளி[2] +. Sweet potato; வள்ளிக்கிழங்கு. (C. G.)

வெள்ளிக்கிழமை veḷḷi-k-kiḻamai, n. < வெள்ளி[1] +. Friday; வாரத்தின் ஆறாவது நாள்.

வெள்ளிக்கோல் veḷḷi-k-kōl, n. < id. + கோல்[1]. A kind of steel-yard; துலாக்கோல்வகை. வெறுநாய் சந்தைக்குப்போனால் வெள்ளிக்கோலால் அடிபட்டுவரும்.

வெள்ளிக்கோல்வரையன் veḷḷikkōl-varaiyaṉ, n. < வெள்ளிக்கோல் + வரை. A snake with white marks resembling those on a *velli-k-kōl*; வெள்ளிக்கோலின் வரைகளைப்போன்ற இரேகைகளையுடைய பாம்புவகை. (சங். அக.)

வெள்ளிச்சரிகை veḷḷi-c-carikai, n. < வெள்ளி[1] + சரிகை[3]. Silver lace; வெள்ளியால் இழைத்த சரிகை.

வெள்ளிசா[1] veḷḷi-cā, n. prob. id. + சாய்[4]. Grey mallet, silvery, *Mugil borneensis*; வெண்மையான கடல்மீன்வகை.

வெள்ளிசா[2] veḷḷicā, *adv.* Corr. of வள்ளிசாய்.

வெள்ளிடம் veḷ-ḷ-iṭam, n. < வெள்[1] +. Vacant space; இடைவெளி. எள்ளிட வெள்ளிடமின்றென வீண்ட (கந்தபு. அவைபுகு. 25).

வெள்ளிடி veḷ-ḷ-iṭi, n. < id. +. 1. Thunder from summer clouds, as not followed by rain; கோடையில் மழைபெய்யாது இடிக்கும் இடி. அத்தசையிலே வெள்ளிடிவிழுந்தாற போலே (திவ். திருநெடுந். 28, வ்யா. பக். 236). 2. Sudden stroke of misfortune; எதிர்பாராது திடீரெனவரும் ஆபத்து. (W.)

வெள்ளிடை veḷ-ḷ-iṭai, n. < id. + இடை[1]. 1. Atmospheric space; ஆகாயம். நெடு வெள்ளிடையாகி நிலனுமாகி (தேவா. 879, 10). 2. Open space; வெளியிடம். உள்ளுறு வெழுதா வெள்ளிடை வாயிலும் (மணி. 6, 44). (பிங்.) 3. Intervening space; இடைவெளி. வெள்ளிடை யின்றாய் . . . தொகுவார் (பிரமோத். 20, 25). 4. Clearness; தெளிவு.

வெள்ளிடைமலை veḷḷiṭai-malai, n. < வெள்ளிடை + மலை[4]. That which is perfectly clear, as a hill in a plain; யாவரும் அறியும்படி தெளிவாயிருப்பது.

வெள்ளிண்டங்கொடி veḷḷiṇṭaṅ-koṭi, n. < வெள்ளிண்டு +. See வெள்ளிண்டு. (L.)

வெள்ளிண்டு veḷ-ḷ-iṇṭu, n. < வெள்[1] +. Shining-leaved soap pod, l. cl., *Acacia intsia*; கொடிவகை. (L.)

வெள்ளித்தடி velli-t-taṭi, n. < வெள்ளி[1] +. Silver rod, an item of paraphernalia, carried in procession before great persons; பெரியோர் முன் எடுத்துச்செல்லும் விருதுகளு ளொன்றான வெள்ளி கட்டிய தடி.

வெள்ளித்தடிச்சேவகன் veḷḷittaṭi-c-cēvakaṉ, n. < வெள்ளித்தடி + சேவகன்[1]. Peon who carries a veḷḷi-t-taṭi; வெள்ளித்தடியைத் தூக்கிச்செல்லும் பணியாளன்.

வெள்ளிது veḷḷitu, n. < வெண்-மை. That which is plain; வெளிப்படையானது. நுண்பொருட் டாகிய பொருள் கேட்டார்க்கு வெள்ளிதன்றி உள் ளுடைத்தாகி (தொல். பொ. 656, உரை).

வெள்ளிநாணயம் veḷḷi-nāṇayam, n. < வெள்ளி[1] + நாணயம்[1]. Silver coin; வெள்ளியில் அடிக்கப்பட்ட பணம்.

வெள்ளிநிமிளை veḷḷi-nimiḷai, n. <id. +. 1. Bismuth ore; நிமிளைவகை. 2. Silver-coloured bismuth; நிமிளைமருந்துவகை. (W.)

வெள்ளிநிலை veḷḷi-nilai, n. <id.+. (Puṟap.) Theme praising the planet Šukra on his powers to cause rain and relieve distress; துயர்தீரச் சுக்கிரன் மழை பெய்வித்ததலைப் புகழ்ந்து கூறும் புறத்துறை. (பு. வெ. 9, 16.)

வெள்ளிப்பணம் veḷḷi-p-paṇam, n. <id. + பணம்[2]. A silver coin=2½ annas; இரண்டரை யணு மதிப்புக்கொண்ட ஒரு வெள்ளி நாணயம். *Rd.*

வெள்ளிப்பணிதி veḷḷi-p-paṇiti, n. <id. + பணிதி[1]. 1. Silver ornament; வெள்ளிநகை. 2. Decorated silver-plate; வேலைப்பாடமைந்த வெள்ளித் தட்டம். (W.)

வெள்ளிப்பல்லக்கு veḷḷi-p-pallakku, n. <id.+. A palanquin; பல்லக்குவகை. *Nāñ.*

வெள்ளிப்பாட்டு veḷḷi-p-pāṭṭu, n. <id. + பாட்டு[1]. See வெள்ளிப்பாடல்.

வெள்ளிப்பாடல் veḷḷi-p-pāṭal, n. <id.+. Stanzas interpolated in ancient poems by a poet called Veḷḷi; பழைய நூல்களில் வெள்ளி என்ற புலவராற் புதியவாகப் பாடிச் சேருகப்பட்ட பாடல்.

வெள்ளிப்பாளம் veḷḷi-p-pāḷam, n. <id.+. Bar of silver; உருக்கிவார்த்த வெள்ளி யின் பாளம். (W.)

வெள்ளிப்பிரிவு veḷḷi-p-pirivu, n. <id. +. (Astron.) Declination of the planet Venus; சுக்கிரனது கதிமாற்றம். (W.)

வெள்ளிப்பிள்ளையார் veḷḷi-p-piḷḷaiyār, n. <id.+. See வெள்ளிப்பிள்ளையார்நோன்பு.

வெள்ளிப்பிள்ளையார்நோன்பு veḷḷi-p-piḷḷaiyār-nōṉpu, n. <வெள்ளிப்பிள்ளையார் +. A fast observed by Vēḷāḷa married women; வேளாள சுமங்கலிகள் கொண்டாடும் நோன்புவகை.

வெள்ளிபற்பம் veḷḷi-paṟpam, n. <வெள்ளி[1] + பற்பம்[1]. See வெள்ளிபஸ்மம்.

வெள்ளிபஸ்பம் veḷḷi-paspam, n. <id.+ பஸ்மம். See வெள்ளிபஸ்மம்.

வெள்ளிபஸ்மம் veḷḷi-pasmam, n. <id. +. Black oxide of silver, *Argenti oxidum;* வெள்ளியை நீற்றிச்செய்த மருந்துவகை.

வெள்ளிபூத்தல் veḷḷi-pūttal, n. <id.+ பூ-. (W.) 1. Rising of the stars; நட்சத்திரங் களின் உதயம். 2. Rising of the planet Venus at early dawn; அதிகாலையிற் சுக்கிரோதயமாகை.

வெள்ளிமடந்தாள் veḷḷimaṭantāḷ, n. <வெள்ளிமடந்தை. See வெள்ளிமடந்தான் கெண்டை. (யாழ். அக.)

வெள்ளிமடந்தான்கெண்டை veḷḷi-maṭantāṉ-keṇṭai, n. <id. + கெண்டை[1]. A kind of *keṇṭai* fish; கெண்டைமீன்வகை. (W.)

வெள்ளிமடந்தை veḷḷi-maṭantai, n. <வெள்ளி[1] + perh. மடந்தை. Moossanda of Ceylon, l. sh., *Mussaenda frondosa;* நீண்ட செடி வகை. (L.)

வெள்ளிமலாம் veḷḷi-malām, n. <id.+. See வெள்ளிமுலாம். (யாழ். அக.)

வெள்ளிமலை veḷḷi-malai, n. <id.+ மலை[4]. 1. Mt. Kailas; கைலைமலை. (திவா.) வெள்ளிமலை யெடுத்துலக மூன்றுங் காவலோன் (கம்பரா. சூர்ப்ப. 39). 2. (Jaina.) A mountain. See விசயார்த்தம், 1. (சூடா.)

வெள்ளிமன்றம் veḷḷi-maṉṟam, n. <id. +. See வெள்ளியம்பலம். (திருவாலவா. நகரச். 4.)

வெள்ளிமாடம் veḷḷi-māṭam, n. <id.+ மாடம்[1]. A kind of royal residence; அரண்மனை வகை. (சிலப். 25, 5.)

வெள்ளிமீன் veḷḷi-mīṉ, n. <id.+ மீன்[1]. Venus; சுக்கிரன். வெள்ளிமீனை யொருகைக்குட் பிடித்து (கொண்டல்விடு. 191).

வெள்ளிமுலாம் veḷḷi-mulām, n. <id.+. Coating or plating with silver; வெள்ளிப் பூச்சு.

வெள்ளியங்கிரி veḷḷi-y-aṅ-kiri, n. <id.+ கிரி[2]. See வெள்ளிமலை, 1. (பிங்.)

வெள்ளியம் veḷḷiyam, n. cf. வெள்ளில்[1]. Wood-apple. See விளா[1]. (மலை.)

வெள்ளியம்பலத்தம்பிரான் veḷḷi-y-ampala-t-tampirāṉ, n. < வெள்ளியம்பலம் +. A poet. See வேள்ளி[1], 8.

வெள்ளியம்பலம் veḷḷi-y-ampalam, n. < வெள்ளி[1] +. The sacred hall dedicated to Naṭarāja in the Śiva temple at Madura; மதுரைக் கோயிலில் நடராஜமூர்த்திக்குரிய மன்றம். வெள்ளி யம்பலத்து நள்ளிருட் கிடந்தேன் (சிலப். பதி. 40, 41).

வெள்ளியம்பலவாணத்தம்பிரான் veḷḷiyampala-vāṇa-t-tampirāṉ, n. < வெள்ளியம பலம் + வாணன்[1] +. See வேள்ளி[1], 8.

வெள்ளியார் veḷḷiyār, n. < வெள்ளி[1]. 1. White-coloured persons; வெண்ணிற முடையவர். (திவ். பெரியதி. 1, 8, 2.) 2. Pure and noble minded persons; சத்துவகுணமுள்ளவர். வெள்ளியார வணங்க விரைந்தருள் செய்வான் (திவ். பெரியதி. 4, 10, 7). 3. Śukra; சுக்கிரன். (திவ். பெரியதி. 4, 10, 7, வ்யா.) 4. Śiva; சிவபிரான். (திவ். பெரியதி. 9, 7, 9, வ்யா.)

வெள்ளியிலைச்செடி veḷḷi-y-ilai-c-ceṭi, n. < id. + இலை + செடி[1]. See வெள்ளிமடந்தை. (L.)

வெள்ளியுயிர் veḷḷi-y-uyir, n. < id. + உயிர்[2]. Human being; மக்கட்பிறப்பு. (சீவக. 3111, உரை.)

வெள்ளியெழுதல் veḷḷi-y-eḻutal, n. < id. +. Rising of the morning star; சுக்கிரோதய மாகை. (திவ். திருப்பா. 13.)

வெள்ளிரேக்கு veḷḷi-rēkku, n. < id. +. Silver leaf; மிகமெலிதாக அடிக்கப்பட்ட வெள்ளித் தகடு.

வெள்ளில்[1] veḷḷil, n. 1. [K. bēlal.] Wood-apple. See விளா[1]. (பிங்.) 2. Fruit of wood-apple; விளாம்பழம். மன்ற விளவின் மனைவீழ் வெள ளில் (புறநா. 181).

வெள்ளில்[2] veḷḷil, n. < வெள்[1] + இல்[1]. Bier; பாடை. (பிங்.) வெள்ளிற் பாடை (மணி. 6, 93).

வெள்ளிலங்காடு veḷḷilan-kāṭu, n. < வெள் ளில்[2] + காடு[3]. Cremation ground; சுடுகாடு. வெள ளிலங்காட்டிடை . . . நடமாடிய நாதனை (தேவா. 439, 10).

வெள்ளிலத்தி veḷḷilatti, n. See வெள்ளி லோத்திரம், 2. (தைலவ.)

வெள்ளிலை[1] veḷ-ḷ-ilai, n. < வெள்[1] +. 1. Betel leaf; வெற்றிலை. வெள்ளிலைத்தம்பல் கண்டார் (கம்பரா. வரைக். 49). 2. See வெள்ளிமடந்தை. (L.)

வெள்ளிலை[2] veḷ-ḷ-ilai, n. < வெள்[2] +. Sharp edge, as of a spear; வேல் முதலிய ஆயுதத் தின் அலகு. வெள்ளிலை வேலினுன் (சீவக. 328).

வெள்ளிலைப்பற்று veḷḷilai-p-paṟṟu, n. < வெள்ளிலை[1] +. Bundle of betel leaves; வெற்றி லைக் கவளி. அடைக்காயமுதுக்கு . . . வெள்ளிலைப் பற்றொன்பதும் (S. I. I. iii, 188).

வெள்ளிலையமுது veḷḷilai-y-amutu, n. < id. +. Offering of betel, as to a deity; தாம்பூல நிவேதனம். (S. I. I. ii, 128.)

வெள்ளிலோத்தி veḷḷilōtti, n. A plant, Symplocos beddomei; செடிவகை.

வெள்ளிலோத்திரம் veḷḷi-lōttiram, n. < வெள்ளில்[1] + லோத்திரம். 1. A tree with white flowers; வெண்பூவுள்ள மரவகை. வெள்ளிலோத்தி ரத்தின் பூமபொருககைததத சாந்தின் (சீவக. 622). 2. Wood-apple. See விளா[1]. 3. Bark of wood-apple tree; விளாம்பட்டை. (W.)

வெள்ளிவரைகாப்போன் veḷḷi-varai-kāppōṉ, n. < வெள்ளி[1] + வரை + கா-. Nanti, as guarding Mt. Kailas; நந்தி. (நாமதீப. 42.)

வெள்ளிவவ்வால் veḷḷi-vavvāl, n. < id. +. Silver pomfret, greyish neutral tint with purplish reflexions, attaining 1 ft. in length, Stromateus cinereus; சாம்பல்நிறமும் சிவப்பு நிறமும் கலந்ததும் ஓர் அடி வளர்வதுமான மீன்வகை.

வெள்ளிவள்ளி veḷḷi-vaḷḷi, n. < id. + வள்ளி[1]. A kind of silver armlet, worn by women; மகளிரணியும் வெள்ளித் தோள்வளை. வெள்ளிவள்ளியின் விளங்கு தோணலார் (சீவக. 420).

வெள்ளிவாரம் veḷḷi-vāram, n. < id. + வாரம்[2]. See வெள்ளிக்கிழமை. (சிலப். 23, 135.)

வெள்ளிவிழா veḷḷi-viḻā, n. < id. +. Silver jubilee; ஆட்சி தாபனம் முதலியவற்றின் இருபத்தைந்தாவது ஆண்டுநிறைவுக் கொண்டாட்டம்.

வெள்ளிவெற்பு veḷḷi-veṟpu, n. < id. +. Mt. Kailas; கயிலாயமலை. (சூடா.)

வெள்ளிவேர் veḷḷi-vēr, n. prob. id. +. Rootlet; சல்லிவேர். (சங். அக.)

வெள்ளிழுது veḷ-ḷ-iḻutu, n. < வெள்[1] +. Butter; வெண்ணெய். வெண்மை வெள்ளிழுது (குறுந். 277).

வெள்ளிறகுமந்தாரை veḷ-ḷ-iṟaku-man-tārai, n. < id. + இறகு +. See வெள்ளைமந்தாரை. (யாழ். அக.)

வெள்ளிறா veḷ-ḷ-iṟā, n. < id. +. See வெள் ளிறால். (W.)

வெள்ளிறால் veḷ-ḷ-iṟāl, n. < id. +. 1. White prawn, white shrimp, Cancer sctiferus;

மீன்வகை. 2. cf. வெள்ளரா. A sea-fish. See மாப்பிலாச்சை.

வெள்ளீயம் veḷ-ḷ-īyam, n. <id.+ஈயம்². Tin; உலோகவகை. (பதார்த்த. 1174) (W.)

வெள்ளீயமணல் veḷḷīya-maṇal, n. <வெள்ளீயம்+. Sand mixed with tin; tin ore; வெள்ளீயங்கலந்த மணல்.

வெள்ளீயவுப்பு veḷḷīya-v-uppu, n. <id. +. White vitriol, *Zinci sulphas;* துத்தநாக வுப்பு. (M. L.)

வெள்ளீரல் veḷ-ḷ-īral, n. <வெள்¹+ஈரல்¹. Lung; சுவாசாசயம். (W.)

வெள்ளுப்பு veḷ-ḷ-uppu, n. <id.+. White salt; வெண்மைநிறமான உப்பு. வெள்ளுப்புப் பகருநர் (மணி. 28, 31).

வெள்ளுயிர் veḷ-ḷ-uyir, n. <id.+உயிர்². Pure, perfected soul; சுத்தான்மா. என்னை வெள்ளுயிராக்க வல்ல (திவ். திருப்பல். 8).

வெள்ளுருட்டு veḷ-ḷ-uruṭṭu, n. <id.+. Bluff, empty threat; வெறுமனே பயமுறுத்துகை. (W.)

வெள்ளுவரி veḷ-ḷ-uvari, n. <id.+. Good drinking-water; நல்லநீர். வெள்ளுவரி சேயக்கு (சினேந். 366).

வெள்ளுவா veḷ-ḷ-uvā, n. <id.+உவா². White elephant; வெள்ளையானை. வெள்ளுவாப்பிடரேறிய வேந்தனேமுதல் (பருவெ. பள்ளு. 8).

வெள்ளுழவு veḷ-ḷ-uḻavu, n. <id.+. Ploughing while the land is neither very dry nor very wet; நிலத்தில் ஈரம் அல்லது காய்ச்சல் அதிசயமில்லாத காலத்தில் உழும் உழவு.

வெள்ளுழவுப்பயிர் veḷḷuḻavu-p-payir, n. <வெள்ளுழவு+பயிர்⁵. Young crops on land properly moist when sown, the furrows being visible; பக்குவமான ஈரத்தில் உழுதுவிதைத்து உழவு சால் தோன்ற விளையும் பயிர். (W.)

வெள்ளுள்ளி veḷ-ḷ-uḷḷi, n. <வெள்¹+. [T. vellulli.] Garlic. See வெள்ளைப்பூண்டு. (சிலப். 11, 82, உரை.)

வெள்ளுளுவை veḷ-ḷ-uḷuvai, n. <id.+. A kind of uḷuvai fish; உளுவைமீன்வகை. (சங். அக.)

வெள்ளுறட்டி veḷ-ḷ-uraṭṭi, n. prob. id.+ரொட்டி. A kind of sweetmeat; பண்ணிகாரவகை. (யாழ். அக.)

வெள்ளுறி veḷ-ḷ-uri, n. <id.+. A kind of net-bag used by Jain monks; சைனத் துறவிகள் கைக்கொண்ட உறிவகை. கூறை வெள்ளுறி குண்டிகைக் காவினர் (பெருங். உஞ்சைக். 36, 228).

வெள்ளுச்சி veḷḷūcci, n. <id.+prob. ஊசசு-. A kind of snail; நத்தைவகை.

வெள்ளூமத்தை veḷ-ḷ-ūmattai, n. <id.+. 1. White-flowered Asiatic thorn-apple, s. tr., *Datura fastuosa-alba;* சிறிய ஊமத்தைவகை. 2. Thorn-apple, l. sh., *Datura stramonium;* பெரிய ஊமத்தைவகை. 3. Downy datura. See அடுக்கூமத்தை.

வெள்ளெருக்கு veḷ-ḷ-erukku, n. <id.+. White madar, l. sh., *Calotropis gigantea-alba-flora;* எருக்குவகை. வெள்ளெருக்கரவம் விரவுஞ் சடை (தேவா. 160, 1).

வெள்ளெலி veḷ-ḷ-eli, n. <id.+எலி¹. A species of rat, *Gerbillus indicus;* எலிவகை. குருஉமயிரப் புன்றாள் வெள்ளெலி (அகநா. 133).

வெள்ளெலும்பு veḷ-ḷ-elumpu, n. <id.+. Blanched bone; தேய்ந்து தசைகழிந்த எலும்பு. உள்ளங்கால் வெள்ளெலும்பு சோவ (பெருந்தொ. 1239).

வெள்ளெழுத்து veḷ-ḷ-eḻuttu, n. <id.+. Long sight, *Hypermetropia;* எழுத்து முதலியன விளங்கத் தெரியாமைக்குக் காரணமாகிய பார்வைக் குறை. (W.)

வெள்ளெள் veḷ-ḷ-eḷ, n. <id.+எள்¹. A white species of sesame; வெள்ளை நிறமான எள்வகை. வெள்ளெட் சாந்து (புறநா. 246).

வெள்ளென்பு veḷ-ḷ-enpu, n. <id.+என்பு¹. See வெள்ளெலும்பு. வெள்ளென் பூழ்பெற (சீவக. 803).

வெள்ளென veḷḷeṉa, adv. <வெள்ளெனல் +. 1. Early in the morning; அதிகாலையில். வெள்ளென எழுந்திருக்கவேணும். 2. Beforehand, betimes; குறித்த காலத்திற்கு முன்னமே. பகலில் வெள்ளென வந்துவிட்டாய்.

வெள்ளெனல் veḷ-ḷ-eṉal, n. <வெள்¹. 1. Expr. of (a) becoming white; வெண்மையாதற் குறிப்பு. வெள்ளென விளர்த்தது (நன். 423, மயிலை.): (b) becoming clear; தெளிவாதற் குறிப்பு. வெள்ளென நோவாதோன்வயிற் றிரங்கி (புறநா. 207); (c) dawning of day; பொழுதுவிடிதற் குறிப்பு.

வெள்ளேடு veḷ-ḷ-ēṭu, n. <id.+. Blank ōla, palm leaf not written upon; வெற்றேடு. வெள்ளேட் டங்கண் விதத்த கெழுதிய (பெருங். உஞ்சைக். 32, 69).

வெள்ளேறன் vel-l-ēraṉ, n. prob. id. + perh. E. iron. Scrap iron; பழதான இரும்பு. (யாழ். அக.)

வெள்ளை vellai, n. <வெண்-மை. [T. M. vella.] 1. Whiteness; வெண்மை. வெள்ளை வெள் யாட்டுச்செச்சை (புறநா. 286). (பிங.) 2. Balarāma; பலராமன். மேழிவலனுயர்த்த வெள்ளை (சிலப. 14, 9). 3. Lime mortar, slaked lime for whitewash; சுண்ணாம்பு. 4. The three white things, viz., cuṉṉāmpu, pāl, mōr; சுண்ணாம்பு பால் மோர் என்ற மூன்று வெண்மையான பண்டங்கள். வேண்டாதவ னிடத்திலும் வெள்ளை வாஙகலாம். 5. A silver coin; வெள்ளிநாணயவகை. வெள்ளை வெள்ளை யென் பார்கள் மேதினியோர் (பணவிடு. 341). 6. White lead; வெள்ளீயம். (W.) 7. Diamond; வயிரம். இது நல்ல வெள்ளை. Loc. 8. A flaw in emeralds, one of eight marakata-k-kuṟṟam, q.v.; மரகதக் குற்றம் எட்டனுள் ஒன்று. (சிலப. 14, 184, உரை.) 9. Conch; சங்கு. (ஈடு, 6, 1, 5, அரும.) 10. Toddy; கள். (பிங.) 11. Wight's Indian nettle. See மலைப்புன்கு. (L.) 12. A mineral poison. See வெள்ளைப்பாஷாணம். (மூ. அ.) 13. A prepared arsenic; வைப்புப்பாஷாணவகை. (W.) 14. See வெட்டை, 4, 5. (W.) 15. Indian kino tree; வேங்கைமரம். (மலை.) 16. White cloth; cloth washed white; வெள்ளைத்துணி. 17. See வெள்ளையாடை. 18. Wash; வெளுப்பு. கோடி யொரு வெள்ளை குமரி யொரு பிள்ளை. 19. White cow or bull; வெள்ளைமாடு. பானிற வண்ணன் போற் பழிதீர்ந்த வெள்ளை (கலித். 104). 20. Goat; வெள்ளாடு. துருவை வெள்ளையொடு விரைஇ (மலை படு. 414). 21. Kid; வெள்ளாட்டுக்குட்டி. (W.) 22. A variety of campā paddy; சம்பாநெல்வகை. (G. Tn. D. I, 153.) 23. Guileless person or animal; கபடமற்ற-வன்-வள்-து. வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை (கொன்றைவே.). 24. Person who has no attachments; பற்றற்றவன். (ஈடு, 6, 1, 5, அரும.) 25. Ignorant person; அறிவில்லாதவன். 26. That which is superficial and not deep or profound; கருத்தாழமில்லாதது. நாவினில் விளையு மாற்ற நின் திருவடிவினு மிகவெள்ளை யாகியது (பாரத. உலூகன்றூது. 4). 27. That which is plain in meaning; பொருள் வெளிப்படையானது. இந்தப் பாட்டு வெள்ளையா யிருக்கிறது. (W.) 28. (Pros.) Veṇpā metre; வெண்பா. வெள்ளையுட் பிறதளை விரவா (யாப். 22). 29. (Mus.) Discordant note or sound; இசையில் உண்டாம் வெளிற் றோசை. வெள்ளை காகுளி (திருவிளை. விறகுவிற். 30). 30. Trifling; அற்பம். வெள்ளைமழை யென்றே விளம்பு (சினேந். 421).

வெள்ளைக்கட்டை vellai-k-kaṭṭai, n. <வெள்ளை+. A kind of campā paddy; சம்பா நெல்வகை. (Nels.)

வெள்ளைக்கடப்பு vellai-k-kaṭappu, n. <id. + கடப்பு[2]. A kind of paddy; நெல்வகை.

வெள்ளைக்கடம்பு vellai-k-kaṭampu, n. <id. + கடம்பு[2]. (L.) 1. Cadamba, l. tr., Anthocephalus cadamba; நீண்ட கடம்பமரவகை. 2. Bridal-couch plant, l. tr., Hymenodictyon excelsum; நீண்ட மரவகை.

வெள்ளைக்கடம்பை vellai-k-kaṭampai, n. See வெள்ளைக்கடம்பு. (L.)

வெள்ளைக்கடுக்காய் vellai-k-kaṭukkāy, n. <வெள்ளை+. White myrobalan of Cuddapah, l. tr., Terminalia pallida; கடுக்காய்மரவகை. (L.)

வெள்ளைக்கடுகு vellai-k-kaṭuku, n. <id. +. See வெண்கடுகு.

வெள்ளைக்கடுதாசி vellai-k-kaṭutāci, n. <id. +. See வெள்ளைக்காகிதம்.

வெள்ளைக்கண்ணி vellai-k-kaṇṇi, n. <id. + கண்ணி[3]. Pink-tinted heart-leaved glory tree, l. sh., Clerodendron infortunatum; செடிவகை. (L.)

வெள்ளைக்கர்ப்பூரம் vellai-k-karppūram, n. <id. + கர்பபூரம்[1]. A species of camphor; கர்ப் பூரவகை. (W.)

வெள்ளைக்கரடி vellai-k-karaṭi, n. <id. + கரடி[1]. White bear, polar bear; கரடிவகை. (W.)

வெள்ளைக்கரு vellai-k-karu, n. <id. + கரு[3]. The white of egg; கோழிமுட்டையுள் வெண்மையான பாகம். (W.)

வெள்ளைக்கருங்காலி vellai-k-karuṅkāli, n. <id. +. Egg-fruited ebony, m. tr., Diospyrus oocarpa; மரவகை. (L.)

வெள்ளைக்கல் vellai-k-kal, n. <id. +. 1. See வெள்ளைராசிக்கல். 2. White marble; வெண் ணிறமான சலவைக்கல். 3. Gem, whitish or pale in lustre; மங்கலான ஒளியுள்ள இரத்தினம். 4. Glass cut in imitation of diamond; வயிரம் போன்று பட்டைசெதுக்கிய கண்ணாடிக்கல்.

வெள்ளைக்கலியாணமுருக்கு vellai-k-kaliyāṇa-murukku, n. <id. +. White coral-tree, m. tr., Erythrina suberosa; மரவகை. (L.)

வெள்ளைக்கவி vellai-k-kavi, n. <id. + கவி[3]. 1. (Pros.) See வெண்கவி, 1. 2. See வெண்கவி, 2. வெள்ளைக்கவிக் காளமேகமே (தனிப் பா. i, 80, 160). 3. One who composes verses in inelegant language; புன்மொழிகளாற் கவிபாடு வோன். (வெண்பாப். செய். 48.) 4. Eulogist who gets another to begin his poem; பிறரைத் தொடங்கச்செய்து கவிபாடுவோன். (W.) 5. Eulo-

gistic ode which the author gets another to begin; பிறர் தொடங்கப் பாடும் துதிக்கவி. (W.)

வெள்ளைக்கற்றளை vellai-k-karralai, *n.* <id.+. 1. Sea-fish, silvery, attaining 3 ft. in length, *Sciaena albida;* வெண்ணிறமானதும் மூன்று அடி வளர்வதுமான கடல்மீன்வகை. 2. Sea-fish, greyish darkened with green, attaining 2 ft. in length, *Sciaena miles;* வெளிறின பசுமைநிறமுடையதும் இரண்டு அடி வளர்வதுமான கடல்மீன்வகை.

வெள்ளைக்காக்கட்டான் vellai-k-kāk-kaṭṭāṉ, *n.* <id.+. See வெள்ளைக்காக்கணம். (W.)

வெள்ளைக்காக்கணம் vellai-k-kākkaṇam, *n.* <id.+. White-flowered mussell-shell creeper, s. cl., *Clitoria ternatea-albiflora;* கொடி வகை. (W.)

வெள்ளைக்காக்கி vellaikkākki, *n.* See வெள்ளைக்காக்கணம். (பரி. அக.)

வெள்ளைக்காக்குறட்டை vellai-k-kākku-raṭṭai, *n.* <வெள்ளை+. See வெள்ளைக்காக்கணம். (W.)

வெள்ளைக்காக்கை vellai-k-kākkai, *n.* <id.+காக்கை[1]. White crow, typical of a non-existent thing; இல்பொருளுக்கு எடுத்துக் காட்டாகவுள்ள காக்கை.

வெள்ளைக்காகிதம் vellai-k-kākitam, *n.* <id.+. 1. White paper; வெண்மையான கடுதாசி. 2. Blank paper; எழுதாத கடுதாசி. (W.)

வெள்ளைக்காஞ்சொறி vellai-k-kāñcoṟi, *n.* <id.+. Climbing nettle. See காஞ்சொறி. (L.)

வெள்ளைக்காணம் vellai-k-kāṇam, *n.* <id.+காணம்[1]. A kind of horse-gram; கொள் வகை. *Loc.*

வெள்ளைக்காயா vellai-k-kāyā, *n.* <id.+. Narrow-oblong-leaved tree bilberry, s. tr., *Memecylon augustifolium;* மரவகை. (L.)

வெள்ளைக்கார் vellai-k-kār, *n.* <id.+. A variety of *kār* paddy harvested in the rainy season; மழைக்காலத்தில் அறுவடையாகும் கார் நெல்வகை. (A.)

வெள்ளைக்காரம் vellai-k-kāram, *n.* <id. +காரம்[1]. [T. *veligāramu,* M. *vellikkāram.*] Borax. See வெங்காரம்[1].

வெள்ளைக்காரன் vellai-k-kāraṉ, *n.* <id. +காரன்[1]. [M. *vellakkāran.*] White man, European; ஐரோப்பிய சாதியான்.

வெள்ளைக்காரை vellai-k-kārai, *n.* <id.+காரை[2]. Pounded chunam. See வெண் காரை.

வெள்ளைக்கிலுகிலுப்பை vellai-k-kilu-kiluppai, *n.* <id.+. Rattlewort. See வட்டக் கிலுகிலுப்பை. (பதார்த்த. 254.)

வெள்ளைக்கிளி vellai-k-kiḷi, *n.* <id.+. Cockatoo, *Cacatuina;* கிளிவகை. (W.)

வெள்ளைக்கீரி vellai-k-kīri, *n.* <id.+கீரி[1]. A white mongoose of diminutive size, said to be superior to other mongooses and to be carried by them; மற்றைக்கீரிகளிலும் சிறப்புவாய்ந்ததாய் அவற்றல் தூக்கிச்செல்லப்படுவதாகக் கருதப்படுவதும் வெண்ணிறமுள்ளதுமான சிறிய கீரிவகை. (யாழ். அக.)

வெள்ளைக்கீரை vellai-k-kīrai, *n.* <id.+. A kind of greens; கீரைவகை. (சங். அக.)

வெள்ளைக்குங்கிலியம் vellai-k-kuṅki-liyam, *n.* <id.+. 1. Indian gum anime, l. tr., *Vateria indica;* நீண்ட மரவகை. (L.) 2. Gum anime, a resinous exudation from Indian gum anime; வெள்ளைக்குங்கிலியமரப் பிசின். 3. Kon-kani resin, l. tr., *Boswellia serrata-glabra;* மர வகை. (L.)

வெள்ளைக்குசுமரோகம் vellai-k-kucu-ma-rōkam, *n.* <id.+குசுமம்+. The whites; மேகநோய்வகை. (பைஷஜ.)

வெள்ளைக்குட்டம் vellai-k-kuṭṭam, *n.* <id.+குட்டம்[4]. White leprosy, *Leucoderma;* வெண்குட்டநோய்.

வெள்ளைக்குதிரை vellai-k-kutirai, *n.* <id.+. (W.) 1. White horse; வெண்ணிறக் குதிரை. 2. Toddy; கள். 3. Louse in clothes; சீலைப்பேன்.

வெள்ளைக்குந்துகம் vellaikkuntukam, *n.* See வெள்ளைக்குந்துருக்கம். (L.)

வெள்ளைக்குந்துருக்கம் vellai-k-kuntu-rukkam, *n.* <வெள்ளை+. See வெள்ளைக்குங்கி லியம், 1. (L.)

வெள்ளைக்குப்போடு-தல் vellaikku-p-pōṭu-, *v. tr.* <id.+. To send one's clothes to wash; அழுக்காடைகளை வெளுக்கப் போடுதல். (W.)

வெள்ளைக்குறுவை vellai-k-kuṟuvai, *n.* <id.+. A white species of *kuṟuvai* paddy cultivated throughout the year, maturing in two or three months; வருஷத்தின் எல்லாப் பருவங்களிலும் பயிராவதும் 2 அல்லது 3 மாதங்களில் விளையக்கூடியதுமான குறுவை நெல்வகை.

வெள்ளைக்குன்றி vellai-k-kuṉṟi, *n.* <id. +. A kind of Indian liquorice plant, m. cl., *Abrus precatorius-albiflora;* கொடிவகை. (L.)

வெள்ளைக்குன்றிகம் veḷḷai-k-kuṉṟikam, *n.* <id.+prob. குந்துருகம். See வெள்ளைக் குங்கிலியம், 1. (L.)

வெள்ளைக்குஷ்டம் veḷḷai-k-kuṣṭam, *n.* <id.+. White leprosy. See வெண்குட்டம். (C. G.)

வெள்ளைக்கெளிறு veḷḷai-k-keḷiṟu, *n.* <id.+. See வெள்ளைக்கெளுத்தி.

வெள்ளைக்கெளுத்தி veḷḷai-k-keḷutti, *n.* <id.+. A river-fish, silvery, attaining 18 in. in length, *Macrones cavasius;* வெண்ணிறமான தும் பதினெட்டு அங்குலநீளம் வளர்வதுமான ஆற்று மீன்வகை.

வெள்ளைக்கொடி veḷḷai-k-koṭi, *n.* <id.+. 1. A variety of betel; வெற்றிலைவகை. (G. Sm. D. I. i, 215.) 2. Flag of truce, white flag; சமாதானத்திற்கு அறிகுறியாகக் காட்டும் கொடி.

வெள்ளைக்கொடுவேலி veḷḷai-k-koṭuvēli, *n.* <id.+. White-flowered leadwort. See கொடுவேலி. (L.)

வெள்ளைக்கொம்பு veḷḷai-k-kompu, *n.* <id.+. Grey hair; நரைமயிர். (யாழ். அக.)

வெள்ளைக்கொய்யா veḷḷai-k-koyyā, *n.* <id.+. White guava, l. tr., *Psidium guyava-pyriferum;* பெருங்கொய்யாமரவகை. (L.)

வெள்ளைக்கோங்கு veḷḷai-k-kōṅku, *n.* <id.+. Iron wood of Malabar. See நீர்க் கோங்கு. (L.)

வெள்ளைக்கோட்டி veḷḷai-k-kōṭṭi, *n.* <id.+கோட்டி[2]. Assembly of idlers or shallow persons; பயனில பேசும் அறிவிலார் கூட்டம். வெள்ளைக்கோட்டியும் விரகினி லொழிமின் (சிலப். 30, 198).

வெள்ளைக்கோரான் veḷḷai-k-kōrāṉ, *n.* <id.+கோரான்[1]. Acuminate-leaved jungle geranium, l. sh., *Ixora polyantha;* கொடிவகை. (L.)

வெள்ளைகட்டு-தல் veḷḷai-kaṭṭu-, *v. intr.* <id.+. 1. To be dressed in white; வெள்ளாடை யுடுத்தல். அவன் வெள்ளைகட்டியிருந்தான். 2. To put on white clothes, as a sign of widowhood; மாங்கலிய மிழந்தமையைக் குறிக்க வெள்ளையாடை யுடுத்தல். 3. To spread a white ceiling cloth; வெள்ளாடையால் மேற்கட்டி கட்டுதல்.

வெள்ளைச்சண்டிக்கார் veḷḷai-c-caṇṭi-k-kār, *n.* <id.+. A kind of paddy; நெல்வகை. (A.)

வெள்ளைச்சந்தனம் veḷḷai-c-cantaṉam, *n.* <id.+சந்தனம்[1]. Wooly melon featherfoil, s. tr., *Glochidion tomentosum;* மரவகை.

வெள்ளைச்சம்பா veḷḷai-c-campā, *n.* <id.+சம்பா[1]. A variety of *campā* paddy; சம்பாநெல் வகை. *Loc.*

வெள்ளைச்சர்க்கரை veḷḷai-c-carkkarai, *n.* <id.+. 1. White sugar; சீனிச்சர்க்கரை. 2. Salt; உப்பு.

வெள்ளைச்சாமந்தி veḷḷai-c-cāmanti, *n.* <id.+. See வெள்ளைச்செவ்வந்தி. (மூ. அ.)

வெள்ளைச்சாரணை veḷḷai-c-cāraṇai, *n.* <id.+. Horse-purslane, *Trianthema monogyna;* சாரணைவகை. (W.)

வெள்ளைச்சாரை veḷḷai-c-cārai, *n.* <id.+prob. சார[2]. A tree. See மான்சாரை, 1. (L.)

வெள்ளைச்சிலாந்தி veḷḷai-c-cilānti, *n.* <id.+. Narrow-leaved button flower, l. tr., *Gompha angustifolia;* மரவகை. (L.)

வெள்ளைச்சிறுமணியன் veḷḷai-c-ciṟu-maṇiyaṉ, *n.* <id.+. A variety of *ciṟumaṇiyaṉ* paddy, maturing in 6½ months; ஆறரைமாதத்தில் விளையக்கூடிய சிறுமணியன் நெல்வகை. *Loc.*

வெள்ளைச்சீலை veḷḷai-c-cīlai, *n.* <id.+. White cloth; வெள்ளைத்துணி. *Nāñ.*

வெள்ளைச்சீலைக்குத்தடுக்கிடு-தல் veḷḷai-c-cīlaikku-t-taṭukkiṭu-, *v. intr.* <வெள்ளைச் சீலை+தடுக்கு+. To do honour to well-dressed or rich persons; நன்றாக அலங்கரித்துக்கொள்ளும் பணக்காரருக்கு உபசாரஞ்செய்தல். *Nāñ.*

வெள்ளைச்சீலைப்பண்டாரம் veḷḷai-c-cīlai-p-paṇṭāram, *n.* <id.+பண்டாரம்[2]. See வெள்ளைவேட்டிப்பண்டாரம். *Nāñ.*

வெள்ளைச்சுமங்கலி veḷḷai-c-cumaṅkali, *n.* <வெள்ளை+. Widow, a term of abuse; கைம் பெண். *Loc.*

வெள்ளைச்சுரிதகம் veḷḷai-c-curitakam, *n.* <id.+. (Pros.) The last member in a *kali* verse, constructed with *veṇṭaḷai;* வெண்டளையில் வரும் கலிப்பாவின் இறுதியுறுப்புவகை. (கலித். 143, உரை.)

வெள்ளைச்சுறா veḷḷai-c-cuṟā, *n.* <id.+சுறா[1]. A sea-fish, sandy brown, attaining 20 in. in length, *Tristio zysrous;* ஒருவகைக் கபிலநிறமும் இருபது அங்குல வளர்ச்சியுமுள்ள கடல்மீன்வகை.

வெள்ளைச்செவ்வந்தி veḷḷai-c-cevvanti, *n.* <id.+. White chrysanthemum, *Chrysanthemum carinatum;* செவ்வந்திவகை. (W.)

வெள்ளைச்செம்பு veḷḷai-c-cempu, *n.* <id.+. A species of Indian kales; செம்பு வகை. (சங். அக.)

வெள்ளைச்சொல் veḷḷai-c-col, *n.* <id + சொல்³. 1. Common, plain word; எளிய சொல். (W.) 2. Vulgar word; நாகரிகமற்ற சொல். *Colloq.*

வெள்ளைச்சோளம் veḷḷai-c-cōḷam, *n.* <id.+சோளம்¹. White species of great millet, *Sorghum vulgare;* சோளவகை. (W.)

வெள்ளைசாத்து-தல் veḷḷai-cāttu-, *v. intr.* <id.+. See வெள்ளைபூண்-. வெள்ளை சாத்திக்கொண்டு சடகமென அரங்கமாநகரை விட்டுப் புறப்பட்டு (குருபரம். 362).

வெள்ளைத்தகரை veḷḷai-t-takarai, *n.* <id.+. Sulphur-flowered senna, s. tr., *Cassia glauca;* சிறுபூடுவகை. (L.)

வெள்ளைத்தங்கம் veḷḷai-t-taṅkam, *n.* <id.+. Platinum; உலோகவகை. *Mod.*

வெள்ளைத்தணக்கு veḷḷai-t-taṇakku, *n.* <id.+. Whirling nut. See முட்டைக்கோங்கு. (L.)

வெள்ளைத்தம்பட்டை veḷḷai-t-tampaṭṭai, *n.* <id.+. Sword-bean. See வாளவரை. (L.)

வெள்ளைத்தமிழ் veḷḷai-t-tamiḻ, *n.* <id. +. Simple, plain Tamil; எளிய நடையிலமைந்த தமிழ். (W.)

வெள்ளைத்தனம் veḷḷai-t-taṉam, *n.* <id. +தனம்¹. Simplicity, plainness; கபடமின்மை.

வெள்ளைத்தாரை veḷḷai-t-tārai, *n.* <id. +தாரை². 1. White streak near the root of the tail of cow; பசுவின் பிட்டத்தருகில் உள்ள வெண்ணிறக்கோடு. 2. Cow with *veḷḷai-t-tārai;* வெள்ளைத்தாரையுள்ள பசு.

வெள்ளைத்தாள் veḷḷai-t-tāḷ, *n.* <id.+ தாள்¹. 1. A pest incident to maize crop; சோளப்பயிர் நோயுள் ஒன்று. 2. Blank sheet of paper; வெள்ளைக்கடுதாசி.

வெள்ளைத்தினை veḷḷai-t-tiṉai, *n.* <id.+. White Italian millet, *Panicum glaucum;* வெண்ணிறமுள்ள தினைவகை. (W.)

வெள்ளைத்துத்தம் veḷḷai-t-tuttam, *n.* <id. + துத்தம்². Sulphate of zinc, white vitriol, *Zinci sulphas;* துத்தநாகமுங் கந்தகமுங் கலந்த உப்புவகை.

வெள்ளைத்தும்பி veḷḷai-t-tumpi, *n.* <id. + தும்பி². Sea-fish, greyish, attaining 5 in. in length, *Apistus carinatus;* சாம்பல் நிறமும் ஐந்தங்குல வளர்ச்சியு முள்ள கடல்மீன்வகை.

வெள்ளைத்துமட்டன் veḷḷai-t-tumaṭṭaṉ, *n.* <id. + தமட்டம்². See வெள்ளைத்தம்பட்டை.

வெள்ளைத்துரிசை veḷḷaitturicai, *n.* <id. Wight's Indian nettle See மலைப்புன்கு. (L.)

வெள்ளைத்துவரை veḷḷai-t-tuvarai, *n.* <id.+துவரை¹. (L.) 1. Leafy fruited ebony, m. tr., *Diospyros foliolosa;* மரவகை. 2. Mottled ebony. See வக்கணை², 2. 3. A variety of pigeon-pea, l. sh., *Cajanus indicus-flava;* துவரைச்செடிவகை.

வெள்ளைத்துறட்டி veḷḷai-t-tuṟaṭṭi, *n.* <id.+. Silky-backed round-leaved caper tree, s. tr., *Capparis grandis;* சிறுமரவகை. (L.)

வெள்ளைநண்டு veḷḷai-naṇṭu, *n.* <id.+. White crab; வெண்ணிறமான நண்டு.

வெள்ளைநறுந்தாளி veḷḷai-naṟuntāḷi, *n.* <id.+. White catamaran tree See வெண்டாளி, 1. (சிலப். 13, 156, உரை.)

வெள்ளைநாகம் veḷḷai-nākam, *n.* <id.+ perh. நாகம்⁴. See வெள்ளைநாகை.

வெள்ளைநாகர் veḷḷai-nākar, *n.* <id.+ நாகர்¹. Balarāma; பலதேவர். புகார்வெள்ளைநாகர்தங் கோட்டம் (சிலப். 9, 10).

வெள்ளைநாகை veḷḷainākai, *n.* <வெள்ளை நாகம். Glabrous elliptic obtuse-leaved button tree, l. tr., *Anogeissus latifolia;* நீண்டமரவகை. (L.)

வெள்ளைநாங்கு veḷḷai-nāṅku, *n.* <வெள்ளை +perh. நாங்கு³. Cannon-ball tree of the Southern hills, m. tr., *Asteriastigma macrocarpum;* மரவகை. (L.)

வெள்ளைநாவல் veḷḷai-nāval, *n.* <id.+. Hemispheric-tubed rose-apple l. tr., *Eugenia hemispherica;* நாவல்வகை. (L.)

வெள்ளைநாவி veḷḷai-nāvi, *n.* <id.+ நாவி². A species of aconite; நாவிவகை. (பதார்த்த. 1055.)

வெள்ளைநிறத்தாள் veḷḷai-niṟattāḷ, *n.* <id.+நிறம். Sarasvatī, as white in complexion; சரசுவதி. (பிங்.)

வெள்ளைநீலாம்பரம் veḷḷai-nīlāmparam, *n.* <id.+. Crested purple nail dye, m. sh., *Barleria cristata;* செடிவகை. (L.)

வெள்ளைநுணா veḷḷai-nuṇā, *n.* <id.+. Bracteate dyeing mulberry, s. tr., *Morinda citrifolia-bracteata;* மரவகை. (L.)

வெள்ளைநெல் vellai-nel, *n.* <id.+. A kind of paddy; நெல்வகை. (யாழ். அக.)

வெள்ளைநொச்சி vellai-nocci, *n.* <id.+. Five-leaved chaste tree. See வெண்ணொச்சி. (L.)

வெள்ளைநோக்கம் vellai-nōkkam, *n.* <id.+. See வெள்ளைநோக்கு.

வெள்ளைநோக்கு vellai-nōkku, *n.* <id.+. Guileless look, look of innocence; கள்ளமற்ற பார்வை. வெள்ளைநோக்கின் . . . மழலையின சொலாா (சீவக. 1099).

வெள்ளைப்பசலை vellai-p-pacalai, *n.* <id.+. A species of purslane; பசலைவகை. (மூ. அ.)

வெள்ளைப்பட்டாணி vellai-p-pattāṇi, *n.* <id.+பட்டாணி². Field pea, *Pisum arvense;* பட்டாணிக்கடலை வகை.

வெள்ளைப்படல் vellai-p-paṭal, *n.* <id.+ படு-. Leucorrhoea; நோய்வகை.

வெள்ளைப்பவளம் vellai-p-pavaḷam, *n.* <id.+. A kind of gem; ஒருவகை மணி. (யாழ். அக.)

வெள்ளைப்பற்பம் vellai-p-parpam, *n.* <id.+பற்பம்¹. Calcined metallic powder; உலோகபஸ்மம்.

வெள்ளைப்பாகல் vellai-p-pākal, *n.* <id. +பாகல்². White balsam pear; பாகல்வகை. (யாழ். அக.)

வெள்ளைப்பாதிரி vellai-p-pātiri, *n.* <id. +பாதிரி¹. Trumpet flower, l. tr., *Stereospermum chelonoides;* பாதிரிமரவகை. (L.)

வெள்ளைப்பாஷாணசயநீர் vellai-p-pāsāṇa-cayanīr, *n.* <வெள்ளைப்பாஷாணம்+. A medicinal liquid, *Liquor arsenicalis;* மருந்துநீர் வகை.

வெள்ளைப்பாஷாணம் vellai-p-pāsāṇam, *n.* <வெள்ளை+. A mineral poison, one of 32 *piṟavi-p-pāṣāṇam,* q.v.; பிறவிப்பாஷாணம் முப்பத்திரண்டனு ளொன்று. (பதார்த்த. 1160.)

வெள்ளைப்பிள்ளை vellai-p-piḷḷai, *n.* <id. +. 1. Innocent man; வஞ்சகமற்றவன். (யாழ். அக.) 2. Small-leathery-downy glabrate ovate-lance-dented acuminate-leaved child's amulet tree, l. tr., *Hemicyclia travancorica;* மரவகை. (L.)

வெள்ளைப்பீர்க்கு vellai-p-pīrkku, *n.* <id. +. Sponge gourd; பீர்க்குவகை. (மலை.)

வெள்ளைப்புண் vellai-p-puṇ, *n.* <id.+. Weak ulcer, wound with large flabby pale granulations; ஊன் வெளுத்து மிருதுவாய் விரணத்திற்கு மேல் வளர்ந்து எளிதிலாறாத புண். (இங். வை. 301.)

வெள்ளைப்புத்தி vellai-p-putti, *n.* <id.+ புத்தி¹. 1. Innocence; அறியாமை. 2. Stupidity; அறிவீனம். *Loc.*

வெள்ளைப்புரசு vellai-p-puracu, *n.* <id. +புரசு¹. Lilac silky laburnum, l. sh., *Mundulea suberosa;* செடிவகை. (L.)

வெள்ளைப்புனை vellai-p-puṉai, *n.* <id.+. Cuspidate-leaved calycine croton, s. tr., *Dimorphocalyx glabellus;* மரவகை. (L.)

வெள்ளைப்பூங்கார் vellai-p-pūṅkār, *n.* <id.+. A kind of paddy; நெல்வகை. (A.)

வெள்ளைப்பூச்சு vellai-p-pūccu, *n.* <id. +. 1. Whitewashing; வெள்ளையடிக்கை. 2. Glossing over, as mistakes; தவறு முதலியவற்றை மழுப்பி மறைக்கை. *Loc.*

